Free Circulation Germany- England
மணி: 73 - ஓசை: 320 வைகாசி. May. 2023

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
29TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien & Schmuck
33 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்
Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# இலங்கையில் சிலைகளும் அரசியலும்

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி

## யாழ்ப்பாணத்து கிணற்று நீரைக் குடிக்கலாமா?




அனைவருக்கும் எமது மேதின வாழ்த்துகள்



## இசைக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் என்ன?





# நான் வில்லனாக இருந்த சில கணங்கள்

## ‘உங்களுக்குப் பிடித்ததைச் செய்யுங்கள்’






மாதவி

யேர்மனியில் ஒருவருக்கு நோய் வந்தால் டாக்டர்கள் விரைந்து செயற்படுவார்கள், அதுமட்டுமல்ல! இடையில் தாதிமார் நோய்க்கு மருந்து, அல்லது ஆலோசனை சொல்லாது டாக்டர் நேரடியாக நோயாளியுடன் தொடர்பில் இருப் பார்.

அவசர சிகிச்சை என்றால் அம்புலன்ஸ் அடுத்த வினாடி வாசலில் நிற்கும். பேரூந்து கூட 4.மணி 7 நிமிடத்திற்கு என்றால் பேரூந்து சரியா அந்நேரம் தரிப் பில் நிற்கும். மணிக்கூடு நேரம் கூட பார்த்து சரியான நேரம் விடலாம் என்னும்போது அம்புலன்ஸ் வண்டி விரைந்து வருவது ஒன்றும் அதிசயம் இல்லையை!

இங்கிலாந்தில் இப்படி எல்லா நேரங்களிலும் எதிர் பார்க்க முடியாது. ஆனால் இங்குவாழ்பவர்கள் எவரும் அதற்காக நோயினால் இறந்து விடுகிறார்களோ என்றால் இல்லவே இல்லை. இங்கிலாந்து வைத்திய முறை வேறு. இங்கிலாந்தில் வாழ்பவர்களுக்கு அந்த முறை ஒரு கஸ்டம் என்று சொல்வதற்கு இல்லை. அவர்களது ஒப்பீடு இலங்கையோடு இருக்குமே அன்றி யேர்மனியோடு இருக்காது.

நான் யேர்மனியில் 40 வருடங்கள் இருந்து, தற்போது இங்கிலாந்தில் வசிப்பதால், எனக்கு ஒப்பீடு பேரூந்து மட்டுமல்ல, பார்ப்பது, கேட்பது, உண்பது, பேசுவது எல்லாவற் றிலும் ஒப்பீடு தலைதூக்கி நிற்கும். “யேர்மனியில் என்றால்“ என்றே எனது ஒவ்வொரு பேச்சும் தொடங்கும்.

ஒரு நாள் முதுகு நோகுது என்று டாக்டரிடம் போனேன், கனிவாகக் கதைத்து, எனக்கு ஒரு வாரத்தில் மாறிவிடும், பயப்பிடத் தேவையில்லை. கீறீமுக்கு எழுதுகிறேன் நாளை பாம சியில் எடுங்கள் என்று சொன் னபடி, எழுந்து வழியனுப்பி வைத்தார். இங்கி லாந்தில் வைத்தியம் சரி இல்லை என்றார்கள்! எனக்கு நன்றாகவே இருக்கிறது என்று எண்ணியபடி வீடுவந்தேன்.

சரியாக ஒருவாரம். இரவு 3 மணி இருக்கும், கண்விழித்ததும் காதுக்குள் இரைந்தது. காட்டுக்குள் படுப்பதுபோல் பூச்சிகளின் சத்தம் கேட்டது. காலை மீண்டும் அதே டாக்டரிடம் ஓடினேன். அவர் காது டா க்டர் அல்ல. ஆனால் அவர் பார்த்து காது டாக்டரிடம் போக வேண்டும் என்றால்தான் போகலாம். என்னிடம் சில கேள்விகள் கேட்டார். உங்களுக்கு வந்திருப்பது ஒருவகையான காது இரைச்சல். இரு காதுக்குள்ளும் கேட்பதால் பயமில்லை. அந்த நோய் இதுதான் என்று ஆணித்தரமாக நோய்க்கு ஒரு பெயரும் சொன்னார். நான் அவர் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, அவர் காதுகொடுத்துக் கேட்ட மாதிரி இல்லை.

எனக்கு இப்போ அவர் முகத்தைப்பார்க்க டாக் டர்மாதிரி இல்லை. எவ்வளவு சுகமாக இரண்டு காதுக்குள்ளும் கேட்பதால் பிரச்சினை இல்லை என்கிறார். இவர் படிச்ச டாக்டரா? சென்ற முறை கதாநாயகனாகத் தெரிந்தவர், இப்போ நம்பியார் போல் தெரிந்தார்.

மனதை அடக்கியபடி அப்ப இது மாறாதா? என்றேன். இல்லை ஆனால்! போகப் போகப் பழகிவிடும், உங்களுக்கு எது மிகவும் பிடிக்கிறதோ அதைச் செய்யுங்கள். இரைச்சல் தெரியாமல் இருக்கும் என்றார்.

இன்னும் கோபம்! எனக்கு உச்ச த்தை தொட்டது. இந்த வருத்தம் வரக் காரணம் என்ன என்றேன். அவர் சொன்ன காரணம், என் வாழ்வில் நான் நேர டியாக அப்போதுதான் முதல் தடவை கேட்டேன். அவர் சொன்னது என் முதுமையை. வீடுவந்தேன் காதுக்குள் இரைச்சல் சாகும்வரை கேட்குமா? இனி வாழ்வில் அந்த அமைதி தெரியாதா? என எண்ணியபடி இருந்தபோது, டாக்டர், ‘உங்களுக்கு பிடித்ததைச் செய்யுங்கள்“ பின் இரைச்சல் கேட்பதே தெரியாது என்று சொன்னது நினைவுக்கு வந்தது. என்னோடு சித்திரம் இருக்கிறதே! வரையலாம் என்று வரைந் தேன். இரைச்சல் நிற்கவில்லை, ஆனால் காண வில்லை. முதுகு நோ மாறிவிடும், என்று சொல்லும் போது கதாநாயகனாகத் தெரிந்த டாக்டர், இரைச்சல் வாழ்கைபூராக இருக்கும் என்ற உண்மையைச் சொன்னபோது நம்பியாராகிவிட்டார். இப்போ டாக்டர் முகம் நாயகனாவே தெரிந்தது.

என்னோடு இருப்பது கலையல்ல! கடவுள் என்பேன். என்னைப் பல நேரங்களில் காப்பாற்றிய கடவுளாக கலையே இருந்தது.







அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

வெற்றிமணி

தமிழ் எங்கள்
உயிருக்கு மேல்

ஓசை : 320



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

## இலங்கையில்
# சிலைகளும் அரசியலும்



இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

திடீரென வைக்கப்படும் சிலைகள்தான் யாழ்ப்பாணத்தை இப்போது பரபரப்பாக்கிக்கொண்டிருக்கின்றன. ஒருபுறம் சிலைகள் இடித்துத் தகர்க்கப்படுவதும், மறுபுறம் சிலைகள் வைக்கப்படுவதும் அண்மைக் காலத்தில் தலைப்புச் செய்திகளாகியிருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பை யாருடைய ஆளுகைக்குட்பட்டது என்பதை உறுதிப் படுத்துவதற்கான தொல்லியல் ஆதாரங்களில் ஒன்றாக சிலைகள் கருதப்படுகின்றது. இந்தப்பின்னணியில்தான் சிலைகள் தகர்க்கப்படுவதும் புதிய சிலைகள் இரவோடிரவாக வருவதும் இடம்பெறுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்ட்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கேஸ்வரர் விக்கிரம் கடந்த மாதம் இனந்தெரியாத குழு ஒன்றினால் தகர்க்கப்பட்டது. இந்தப்பகுதிக்கு உரிமை கொண்டாடக்கூடியவர்கள் யார் என்பது நீதிமன்ற விசாரணையில் இருக்கும் நிலையிலேயே இந்த விக்கிரம் தகர்க்கப்பட்டிருக்கின்றது. தொல்லியல் பகுதியாக அடையாளம் காணப்பட்ட இந்தப் பகுதியில் புதிய கட்டுமானங்களை அமைப்பதோ அல்லது நீக்குவதோ தடைசெய்யப்பட்டிருந்த நிலையில்தான் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. முல்லைத்தீவில் குருந்துார்மலைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து வெடுக்குநாறி மலை இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றது.



இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமிப்பதற்கான போரை மற்றொரு வடிவத்தில் அரசாங்கம் முன்னெடுக்கின்றது. முன்னர் படையினர் போரை நேரடியாக முன்னெடுத்தார்கள். இப்போது அரசாங்கத்தின் இயந்திரங்களான திணைக்களங்கள் இந்தப் போரை வெவ்வேறு வடிவங்களில் முன்னெடுக்கின்றன. இதில் தொல்லியல் திணைக்களம் முக்கியமானது. அதனைவிட வன ஜீவராசிகள் திணைக்களம் போன்றனவும் குறிப்பிட்ட பகுதிகளை அடையாளம் கண்டு அங்கிருந்து தமிழரை வெளியேற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கின்றன.

இதில் தொல்லியல் திணைக்களம் முற்றுமுழுதைாக சிங்கள புத்திஜீவிகளையே உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இதற்கு இரண்டு தமிழ்ப் பேராசிரியர்கள் உள்வாங்கப்பட்டதாக செய்திகள் வெளிவந் திருந்தபோதிலும், அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை என சம்பந்தப்பட்ட பேராசிரியர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இனவாத அடிப்படையில் தொல்லியல் திணைக்களம் செயற்படவில்லை என்பதைக் காட்டிக் கொள்வதற்கான ஒரு உபாயமாகவே இந்தச் செய்தியை திட்டமிட்ட முறையில் அரசாங்கம் வெளியிட்டதாகக் கருதப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தீவுப் பகுதிகளை மையப்படுத்தியதாக தொல்லியல் திணைக் களத்தின் செயற்பாடுகள் அண்மைக்காலத்தில் தீவிரப் படுத்தப்பட்டிருக்கின்றது. நயினாதீவைப் பொறுத்தவரையில் அதன் பழமையும் பெருமையும் அனைவருக்கும் தெரியும். ஆனால்,அங்கு அமைக்கப்பட்ட பௌத்த விகாரையைத்தான் முக்கியமானதாகக் கூகுள் வரைபடத்தில் காட்டிக்கொள்வதற்கான உபாயங்களையும் அரசாங்கம் வகுத்துச் செயற்படுகின்றது. கச்சதீவில் இரகசியமான முறையில் அமைக்கப்பட்ட பாரிய புத்தர் சிலையில் பெரும் சர்ச்சையை உருவாக்கியிருக்கின்றது. நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டையை சிங்கள பௌத்த அடையாளமாகக் காட்டிக்கொள்வதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தப்பின்னணியில் சைவத் தமிழர்கள் இப்போது எதிர்வினையாற்றத் தொடங்கியிருப்பதுதான் அரச தரப்பையும் சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுக்கும் திணைக்களங்களையும் சங்கடத்துக்குள்ளாக்கியிருக்கின்றது. அவர்கள் இலக்கு சைக்கும் பல இடங்களில் நடராஜர், சிவன், சிவலிங்கம் என சிலைகள் வைக்கப்படுகின்றது. குறிப்பிட்ட பகுதிகள் தமது ஆளுகைக்குட்பட்டவை என்பதைக் காட்டிக்கொள்வதற்கான ஒரு உபாயமாக இதனை அவர்கள் முன்னெடுக்கின்றார்கள். அதாவது இருப்பைப் பாதுகாப்பதற்கு இவ்வாறு செய்ய வேண்டியிருக்கின்றது.

இதில்தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பது யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நயினை நாகபூசணி அம்மனைப் பிரதிபலிக்கும் சிலை. நயினாதீவு உட்பட அனைத்துத் தீவுகளுக்கும் செல்வதற்கான ஒரே நுளைவாயிலாக இருப்பது பண்ணைப் பகுதிதான்.

22 ஆம் பக்கம் பார்க்க...





# அதிசயக் குறிப்புகளும் அதிரவைக்கும் குசும்புகளும்!

**வெற்றிமைந்தன்**

ஒவ்வொரு மணி நேரமும் நமது உடலில் ஒரு மில்லியன் அணுக்கள் மாற்றப்படும். (அடேங்கப்பா... ஒரு பெரிய நிறுவனமே இயங்குது போல. லே ஆஃப் பிரச்சினை வராதா ?)

நமது கண்ணுக்கு 50 வகையான சாம்பல் நிறங்களைப் பிரித்தறிய முடியும். (அடக் கடவுளே ! அப்போ நமக்கு புடிச்ச கலர்ல எல்லாம் எப்படி ?)

மனிதனுடைய தொடை எலும்புகள் காங்கிரீட்டை விட வலிமையானவை ( சந்தேகம் இருக்கிறவங்க மட்டும் தொடையால காங்கிரீட்டை உடைக்க டிரை பண்ணுங்க.. நான் எஸ்கேப்)

மனித இதயம் முப்பது அடி நீளத்துக்கு இரத்தத்தைப் பீச்சியடிக்கும் வலிமை கொண்டது ( நல்ல வேளை ஒலிம்பிக்ல இதைச் சேக்கல)

நமது கண்கள் பிறந்த நாளில் எவ்வளவு இருக்குமோ அவ்வளவு தான் இருக்கும் ஆயுள் முழுதும். அளவு மாறாது. ஆனா மூக்கும் காதும் கட்டும் காலம் பூரா வளந்துட்டே இருக்கும் (ஐயையோ... அப்போ யானைக்காது மாதிரி ஆயிடுமா)



நமது இருமலுக்கு மணிக்கு 60 கிலோ மீட்டர் வேகம் உண்டு (அட.. நம்ம ஸ்கூட்டியை விட அதிகம்)

நம்ம உடல்லயே அதிக வேகமாக வளரும் முடி, தாடி தான். ஷேவ் பண்ணாமலேயே இருந்தால் நம்ம சராசரி வாழ்நாளில் முப்பது அடி நீளம் வரை வளரும். (சீக்கிய நண்பர்கள் டிரை பண்ணாதீங்க, எட்டு மீட்டர் தொப்பி தேவைப்படும்)

பிறந்த ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை குழந்தைகள் அழுதால் கண்ணீர் வராது (அதுக்காக சும்மா சும்மா அழ வெச்சு டெஸ்ட் பண்ணாதீங்க)

கைவிரல்களைப் போல நாக்கிலும் தனித்துவமான ரேகைகள் உண்டு ( நல்ல வேளை கைநாட்டுக்குப் பதிலா நாக்கு நாட்டு வைக்கல...)

ஒரு புன்னகைக்கு நமது முகத்தில் ஐந்து முதல் ஐம்பத்து மூன்று ஜோடி தசைகள் செயலாற்றும் (எவன்டா இதெல்லாம் எண்றது ?)

இருபது பேர்ல ஒருத்தருக்கு ஒரு எக்ஸ்ட்ரா விலா எலும்பு இருக்கும் (ஓ... தயாரிப்புப் பிழை ?)

கருப்பு நிறம் உடையவர்களுடைய தோல் விரைவில் சுருங்காது. ( அட... அதான் சூப்பர்ஸ்டார் இந்த வயசுலயும் இப்டி இருக்காரு)

மனித உடலில் இரத்தம் ஒரு நாள் ஓடும் தூரம் 60 ஆயிரம் மைல்கள் ! ( அடேங்கப்பா... ஒரே நாள்ல உலகத்தையே சுற்றி வரலாம் போல)

பெண்களின் இதயம் ஆண்களின் இதயத்தை விட வேகமாகத் துடிக்கும் (உன்னை விட அதிகமாய் துடிக்கும் இதயம் எனக்கு.. என்று பெண்கள் கவிதை எழுதலாம்)


நாளொன்றுக்கு ஒரு இலட்சம் தடவை இதயம் துடிக்கும் (அட..சுளுக்கு கிளுக்கு புடிக்காதா ?)

தலைமுடியும் நகமும் ஒரே மூலக்கூறிலிருந்து உருவாகிறது ( நல்ல வேளை கையில முடியும், தலையில நகமும் வளரல...)

**கருகுமணி**

# தலையெழுத்து





தகைசால் பேராசிரியர்
**அ.சண்முகதாஸ்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

ஏதாவது பேரிடர் ஏற்பட்டால் அவ்விடராலே தாக்குண்டவரின் தலையெழுத்து அப்படியாகிவிட்டது என்று நாம் கூறுவது வழக்கம். பிரமன் நம்மையெல்லாம் படைக்கும்போது நம்முடைய தலையிலே நம் விதியினை எழுதிவிடுகிறானாம். அதனை யாராலும் அழிக்கமுடியாது என நம்மவர்கள் நம்புவது உண்டு. ஆனால் அருணகிரிநாதர் என்னும் முருகபக்திக் கவிஞர் இந்தத் தலையெழுத்தையும் மாற்றியமைக்கலாம் என்று சவால் விடுகிறார்.

தலையெழுத்து அழிந்துபோவதைக் கூறு முன்னர் வேறு சில அழிவுகளை முதலிலே அருணகிரியார் கூறுகின்றார். சேல் எனப்படும் பயிரழிப்புப் பூச்சியினாலே திருச்செந்தூர் வயல்களெல்லாம் அழிந்தனவாம். காதல் மயக்கத்தினாலே பூங்கொடி போன்ற பெண்களுடைய மனங்கள் அழிந்தனவாம். பெரிய மயில்மீது உலாவரும் முருகப்பெருமானுடைய வேலாயுதம் பாய்ந்து கடலும் சூரனும் கிரௌஞ்ச மலையும் அழிந்துபோயின. அப்பெருமானுடைய கால் என் தலை மேலே பட்டு பிரமன் எழுதிய எழுத்து முற்றாக அழிந்துபோய்விட்டது. கந்தரலங்காரத்தில்

**சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்**
**மால்பட் டழிந்தது பூங்கொடியார் மனம் மாமயிலோன்**
**வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்அவன்**
**கால்பட் டழிந்தது இங்குஎன் தலைமேலயன் கையெழுத்தே.**

என்று அருணகிரியார் பாடுகிறார்.

கல்வெட்டுகளை கல்வெட்டியலார் கண்டுபிடிப்பது போல தலையினுள்ளும் தலையெழுத்துக்கள் இருப்பதை என்றாவது விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பார்களோ தெரியவில்லை. அது வரையும் அருணகிரியார் கூறியதில் நம்பிக்கைகொள்வோம்.







அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# குற்றம் செய்யாமல் தண்டிக்கப்படும் குஞ்சுகள்



விமல் சொக்கநாதன்
(இங்கிலாந்து)

ஒரு நாட்டில் போர். புயல், பெரு மழை போன்ற நெருக்கடிகள் உருவாகும்போது அந்த நாட்டின் பொறுப்பான அரசாங்கம். குழந்தைகளையே முதலில் காப்பாற்றி பாதுகாப்பாக அப்புறப்படுத்த முற்படும். குற்றம் எதுவுமே செய்யாமல் இளம் தளிர்கள் தண்டிக்கப்படுவதை எந்த காட்டுமிராண்டி ஆட்சியாளனும் பொறுத்துக் கொள்ள மாட்டான்.

1939 அளவில் முதலாம் உலகப் போருக்கும் இரண்டாம் உலகப் போருக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் போர் ஒன்று மூளும் பட்சத்தில் தரை மார்க்கமான தாக்குதலை விட வான் வழி தாக்குதலே முக்கிய அம்சமாக இருக்கும் என்று எல்லோருமே அஞ்சத் தொடங்கினார்கள் 1939 செப்டெம்பர் 03ஆம் திகதி பிரிட்டனும் France ம் ஹிட்லரின் நாஸி ஜேர்மனி போர்ப் பிரகடனம் விடுத்தன. இதற்கு 2 தினங்களுக்கு முன்னர் குழந்தைகள் அனைவரும் காலை 5 மணிக்கு பாடசாலையில் கூடும்படி கேட்கப்பட்டார்கள்.

கழுத்திலே தமது பெயர் விபரங்கள் கொண்ட பட்டியலை அணிந்து சிறிய பயணப்பட்டி ஒன்றுடன் இந்தச் சிறார்கள் ரயிலில் ஏற்றப்பட்டு நகரங்களை விட்டு தொலைவில் உள்ள கிராமங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். இவர்களுக்கு பாதுகாப்பாக சென்ற பெரியவர்கள் கைகளில் பட்டி அணிந்து ரயிலில் கூடமே பயணித்தார்கள், இப்படியாக அரசாங்கத்தால் அப்புறப்படுத்தப்பட்ட குழந்தைகளை குடியமர்த்த புதிய முகாம்களை கட்டி எழுப்புவதைவிட அந்தந்த ஊர்களில் உள்ள ரயில்வே ஊழியர்கள், பொலிஸ் ஊழியர்கள், ஆசிரியர் ஆகியோரின் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டார்கள். நகரங்கள் என்று விபரிக்கும் போது இலண்டனிலிருந்து மட்டுமல்ல manchester. Birmingham, Glasgow இப்படியான நகரங்களிலும் 8 இலட்சம் குழந்தைகள் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்டார்கள்.

இவை நடந்தது 1939 அளவில் இப்போது 2023இல் ஒரு சுதந்திர நாட்டுக்குள் புகுந்து குழந்தைகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்துகிறோம் என்று காரணம் காட்டி ரஷ்யப் படைகள், உக்ரேன் நாட்டு குழந்தைகளைக் கடத்திச் சென்றுள்ளனர்.

பிறந்து நான்கே நான்கு மாதங்களான சிறு சிசுக்கள் தொடக்கம் சுமார் 3,400 உக்ரேனிய குழந்தைகளை தாம் கடத்திச் சென்றிருப்பதாக ரஷ்யா ஒத்துக் கொண்டிருக்கிறது. சுமார் 1,400 குழந்தைகள் அநாதைகள் என்றும் சுமார் 2000 குழந்தைகள் யாரும் துணையின்றி ரஷ்யாவில் வந்து இறங்கியவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது.



இவற்றோடு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து எடுக்கப்படும் குழந்தைகள் மூளைச் சலவை செய்யப்பட்டு ரஷ்யா என்பது யார் இப்போதைய போர் யாருக்காக நடத்தப்படுகிறது என்று குழந்தைகளுக்கு புதிய பாடம் கற்பிக்கும் மறு கல்வி முகாம்கள் பல ரஷ்யாவில் நடத்தப்பட்டு வருகின்றன.

உக்ரேன் - ரஷ்ய மோதல் உருவானது தொடக்கம், உக்ரேனின் 400 அநாதைக் குழந்தைகளை ரஷ்ய குடும்பங்கள் சுவீகாரம் எடுத்துள்ளன. உக்ரேனிலிருந்து 15 வயது குழந்தை ஒன்றை தாமே சுவீகாரம் எடுத்து வளர்த்து வருவதாக அதிபர் புட்டினின் தெருங்கிய சகாவான குழந்தைகளுக்கான கமிஷனர் Vova Belova குறிப்பிட்டிருக்கிறார். Hagueஇல் உள்ள அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் குழத்தைகள் கடத்தல் பற்றி தொடரப்பட்டுள்ள வழக்கில் அதிபர் புட்டினும் அவரது கமிஷனர் திருமதி Belovaவும் குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இது இப்படியிருக்க சிந்தனையை 17ஆண்டுகளுக்கு முன் எங்கள் தாயகத்தில் நடத்தப்பட்ட

30 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

# Lucky Fly Reisebüro

Luckyfly

Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171




SriLankan Airlines | QATAR AIRWAYS القطرية | Emirates | طيران الخليج Gulf Air

Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171

Essener Str.26 44793 Bochum-Germany

அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# உலகின் தலை சிறந்த கட்டிடக்கலைகளுள் ஒன்றான தஞ்சை பெரிய கோவிலுக்கு செல்வதால் துரதிருஷ்டம் வருமா?


**(பொன்னியின் செல்வன் ஸ்பெஷல் )**



கடைச்சோழ வம்சத்தில் உதித்த விஜயாலயன் பரம்பரையினர் வழியில் வந்த மாமன்னன் ராஜராஜன் 1003ம் ஆண்டுக்கும் 1010ம் ஆண்டுக்கும் இடையே எழுப்பிய தமிழ்நாட்டிலுள்ள தஞ்சை பெரியகோயில் தமிழர்களின் சிற்பக்கலை மற்றும் கட்டடக்கலை அறிவுக்கு ஒரு உன்னத எடுத்துக்காட்டாக காலங்காலமாக திகழ்கிறது என்றால் மிகையில்லை. தென்னிந்திய கோயில்களில் மிகவும் பெரியதும், புகழ் பெற்றதுமான இக் கோயிலை 'தட்சிண மேரு' என்றழைக்கின்றனர். போர்களில் கிடைத்த வெற்றிகளை இறைவனுக்கு அர்பணிப்பதற்காகவே இராஜராஜன் இந்தக் கோவிலை கட்டியதாக கூறப்படுகின்றது.

இக் கோயிலின் கட்டுமானம் பொறியியல் துறையில் ஓர் அற்புதம் என்று போற்றப்படுகிறது. கண் எட்டிய தூரம் வரை மலைகளோ, குன்றுகளோ இல்லாத பெரும் செம்மண் சமவெளியே தஞ்சை. ஆனால் பெரும் கற்களால் இந்தக் கோவில் கட்டப்பட்டது எப்படி? இந்தக் கோவிலுக்கான கற்கள் எங்கிருந்து கொண்டுவரப்பட்டது? எப்படிக் கொண்டு வந்து சேர்த்தார்கள்? போன்ற கேள்விகள் மனதில் எழுவது இயல்பானதே. திருச்சிக்கு அருகே மாமலை என்றொரு மலை இருந்ததாகவும், அந்த மலையை முற்றிலும் அறுத்து எடுத்து, யானைகள் மூலம் கொண்டு வரப்பட்ட தாகவும் சொல்லப்படுகிறது. (புதுக்கோட்டை பகுதி மற்றும் திருக் கோவிலூர் என்ற ஊருக்கு அருகிலிருந்தும் கொண்டு வரப்பட்டதாகவும் சில ஆய்வுகள் கூறுகின்றன ). லிங்கமாக வீற்றிருக்கும் பாறையை, குஜராத்தில் உள்ள சௌராஷ்ட்ரா என்ற இடத்தில், நர்மதா நதிக்கரையிலிருந்து கிட்டத்தட்ட இருநூற்று ஐம்பது டன் எடையுள்ள அந்த பாறையை, விந்திய மலைகளைக் கடந்து கொண்டு வந்ததாகக் கூறுகிறார்கள. இந்திய நிலப்பரப்பில் உள்ள ஆலயங்களிலேயே தஞ்சை பெரிய கோவிலில் உள்ள நந்தியே இரண்டாவது பெரிய நந்தி. நந்தியின் உயரம் 12 அடி. நீளம் 20 அடி. தஞ்சை நந்தியின் வேலைப்பாடும், கலை அழகும் தனித்துவமானது , பெரம்பலூர் மாவட்டம் பச்சைமலையிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரே கல்லில் செய்யப்பட்ட நந்தியே இது. மேலும் , தஞ்சை கோவில் கட்டப்பட்ட போது வைக்கப்பட்ட நந்தி சிறு சேதாரம் அடைந்ததால் நாயக்கர் காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட நந்தியே இது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

உலகின் பாரம்பரியச் சின்னமாகவும், தமிழகத்தின் பெருமையுமான தஞ்சைப் பெரிய கோயில் முழுக்க முழுக்க மணல் மீது கட்டப்பட்டுள்ளது என்கின்றன சமீபத்திய ஆய்வுகள். இயற்கையாக அங்கிருந்த சுக்கான் பாறையை தொட்டியாக வெட்டி, அதில் பருமணலை நிறைத்து, அதன் மீது கோயிலைக் கட்டியிருக்கிறார்கள். கருங்கல் தொட்டி, மணல் விலகாமல் இருக்க உதவும். அதேசமயம், மணல்இயல்பாகஅசைந்து கொடுக்கும் தன்மை உடையது. பூமித் தகடுகளின் எதிர்பாராத அசைவுகளின் போது மணலின் அசைந்து கொடுக்கும் தன்மையால் மேற்பகுதியில் இருக்கும் கட்டுமானம் விலகாது. அதாவது, பூகம்பம் வந்தாலும் கோயிலுக்கு எந்த பாதிப்பும் நேராது. தஞ்சை பெரிய கோயிலின் ஒரு கன அடி கல்லின் எடை 70 கிலோ. தோராயமாக கோயிலின் எடை ஒரு லட்சம் டன். அதனை ஒப்பிடும்போது அஸ்திவாரமாக சுமார் ஒரு கோடி கன அடி பருமணலை கல்தொட்டியில் நிரப்பியிருக்க வேண்டும் என்று தெரிகிறது. இதன்மூலம் பூமித் தகடுகளின் அசைவின் போது மணல் அஸ்திவாரம் தன்னைத் தானே சமப்படுத்திக்கொள்ளுமாம். இதனை “zero settlement of foundation“ என்கின்றனர்.






பிரியா இராமநாதன்
(இலங்கை)

இன்னும் எளிமையாக விளக்க வேண்டும் எனில் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மையின் தொழில்நுட்பத்துக்கு ஒப்பானது. அசையுமே தவிர விழாது. மேலும் தஞ்சாவூர் பகுதியில் இருப்பது சமதளத்தில் ஓடும் காவிரி ஆற்றுப் பகுதியின் குறுமணல் என்பதால் அஸ்திவாரத்தில் இடப்பட்டிருக்கும் இந்த மணல் தஞ்சாவூர் முகத் துவாரப் பகுதிக்கான மணல் அல்ல என்றும், கோயிலின் அடியில் கிடைத்த இந்த மூன்று மடங்கு பெரிய பருமணலானது (மலைகளில் பாய்ந் தோடும் காட்டாறுகளில் படியும் மணல் ) மேற்குத் தொடர்ச்சி மலைகளின் காட்டாற்றுப் படுகைகளில் இருந்து தஞ்சைக்கு

28 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# தொப்பி போட்டவர்கள் எல்லாம் எம்.ஜி.ஆருமல்ல

## கறுப்புக்கண்ணாடி போட்வர்கள் எல்லாம் தமிழ்வாணனும் அல்ல

எம்.ஜி.ஆர்-ன் பிரபல வெள்ளை தொப்பி பற்றிய இரகசியங்களும் உண்மைகளும்! எம்ஜிஆர் அணிந்து வந்த வெள்ளை தொப்பி எங்கு, எப்படி, எப்போதிலிருந்து பிரபலமானது. எம்ஜிஆரை அது எப்படி வந்து அடைந்தது போன்ற தகவல்கள் இங்கு கூறப்பட்டுள்ளன. சிறு வயது முதலே தொப்பி மற்றும் கண்ணாடி மீது அதிக ஈர்ப்பும், ஆசையும் கொண்டிருந்திருக்கிறார் எம்.ஜி.ஆர். நடிக்க வந்த பிறகு தனது பாகவதர் ஸ்டைல் சிகையை மறைக்க வெளியிடங்களுக்கு வரும் போது தொப்பியும், அல்லது துண்டை முண்டாசு போல கட்டியும் வரும் வழக்கமும் கொண்டிருந்தாராம்.

எம்.ஜிஆர் தனது பல படங்களில் பாடல்களில் விதவிதமான தொப்பிகளை அணிந்து நடித்திருப்பார். மற்ற நடிகர்களை காட்டிலும் எம்.ஜி.ஆர்-க்கு தான தொப்பி மிகவும் பொருத்தமாக இருக்கிறது என சினிமா துறையினரே பரவலாக பேசிய காலமும் இருந்தது. என்ன இருந்தாலும், எம்.ஜி.ஆர் தனது அரசியல் காலக்கட்டத்தில் தொடங்கி கடைசி வரையில் அணிந்திருந்த அந்த வெள்ளை தொப்பி தான் அவரது அடையாளமாக மாறியது. எம்.ஜி.ஆர் படத்தை வரைய வேண்டும் என்றால் மிகவும் எளிது, தொப்பியும், கண்ணாடியும் வரைந்தால் போதுமானது. இந்தளவு பிரபலமான தொப்பிக்கு பின்னால் சில இரகசியங்களும், உண்மைகளும் மறைந்திருக்கின்றன.

### அடிமைப் பெண்!

படங்களில் மட்டும் தொப்பி பயன்படுத்தி வந்த எம்ஜிஆர்-ஐ நிஜ வாழ்க்கையிலும் தொப்பி பயன்படுத்த வைத்த படம் அடிமைப்பெண். ஜெய்ப்பூரில் படப்பிடிப்பு நடந்துவந்த நேரத்தில் அதிக வெயில் வாட்டி எடுத்தது. அதனால் எம்ஜிஆர் மிகவும் அவதிப்பட்டு வந்தார்.



### புஸ்குல்லா!

படப்பிடிப்பு காண வந்த நபர் இதை கவனித்து எம்ஜிஆர்-க்கு வெள்ளை நிற புஸ்குல்லா பரிசளித்தார்.இந்த தொப்பியால் எம்ஜிஆர் அந்த வெயிலில் சற்று இலகுவாக பணியாற்ற முடிந்தது. மேலும், இந்த தொப்பி எம்ஜிஆர்-க்கு பொருத்தமாகவும்,, அழகாகவும் இருப்பதாகவும் குவிந்த பாராட்டுக்கள், இந்த தொப்பி எம்.ஜி.ஆர் தலையில் நிரந்தர இடம் பிடிக்க காரணம் ஆனது.

### நிரந்தர தொப்பி!

பின்னாட்களில் இந்த வெள்ளை புஸ்குல்லா தொப்பியுடன் அதிகம் வெளிவர துவங்கினார் எம்ஜிஆர். இந்த தொப்பி இல்லாமல் புகைப்படம் எடுப்பதையும் தவிர்த்தார். எம்ஜிஆர்-உடன் மிகவும் ஒன்றிப்போனது இந்த வெள்ளை தொப்பி.

பிரத்யேக தயாரிப்பு! எம்ஜிஆர்-க்கு மிகவும் பிடித்துப்போன இந்த தொப்பியை ரசாக் எனும் தொப்பி தயாரிப்பாளர் பிரத்யேகமாக தயாரித்து தர துவங்கினார். இறுதி காலம் வரை இவர் தான் எம்ஜிஆர்-க்கு தொப்பி தயாரித்து கொடுத்ததாக கூறப்படுகிறது. செம்மறி ஆட்டின் முடிகளை பதப்படுத்தி, அதை மேம்படுத்தி, அதனுள் மூன்று அடுக்குகளில் கேன்வாஸ் வைத்து தைத்து ஸ்பெஷலாக தயாரிக்கப்பட்டது இந்த தொப்பி. காற்று உள்ளே செல்லவும், வியர்வை தங்காமல் இருக்கவும் சிறு சிறு துவாரங்கள் இடம் பெற்றிருந்தன.



### தொப்பி விமர்சனம்!

திமுக-வை விட்டு எம்ஜிஆர் வெளியேறிய போது, எம்ஜிஆர்-ஐ தொப்பியை வைத்து கிண்டலடித்து திமுக-வினர் விமர்சனம் செய்து வந்தனர் என்றும் பல செய்தி கோப்புகள் மூலம் அறியப்படுகிறது.

உடல்நலம் குன்றிய போது... 1984-ல் எம்ஜிஆர்-க்குக் உடல் நலம் குன்றி அவர் அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்தார். அப்போது அவர் இறந்துவிட்டார் என பரவிய வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க எம்ஜிஆர்-ன் படங்கள், வீடியோ காட்சிகள் வெளியிட தீர்மானித்தனர்.

### தொப்பி இல்லாமல் எம்ஜிஆர்!

மருத்துவர்கள் தொப்பி அணிய மறுத்ததால், தொப்பி இல்லாமல், பல வருடங்கள் கழித்து எம்ஜிஆர் தோற்றம் வெளியானது. உடல்நல குறைபாட்டின் காரணத்தால் மெலிந்து காணப்பட்ட எம்ஜிஆர் படங்களை கண்டு மக்கள் மிகவும் வருந்தினர்.

### அடையாளம்!

எம்ஜிஆர் என்றால் அனைவருக்கும் மனதில் தோன்றும் தோற்றத்தில் பெரும்பங்கு இந்த தொப்பியும், கருப்பு கண்ணாடியும் தான் இடம்பெறும். அந்தளவிற்கு எம்ஜிஆர்-ன் அடையாளமாக மாறியது இந்த வெள்ளை தொப்பி. எம்ஜிஆர் இறந்த போதிலும் கூட இந்த வெள்ளை தொப்பியுடன் தான் அடக்கம் செய்தனர்.



அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# மருத்துவப் பழம்

**ஒரு காலத்தில வாழை இல்லாத வீடு யாழ்ப்பாணத்தில இல்லை.**

**வாழை தனிய குலை தனிய வாங்கி கட்டிற நிலமையும் வந்திட்டுது!**



வாழை இறக்க வந்தவன் ஆக்களே இல்லாத வீட்டை மாறி வந்திட்டனோ எண்டு யோசிக்க , “ஓம் தம்பியவை இங்க தான் இறக்குங்கோ“எண்டு வந்த பெரியவரை, “ அப்பா நீங்க சும்மா இருங்கோ வந்தவனுக்கு கொஞ்சம் கூடத் தாறம் எண்டா இறக்கி கட்டி விடுவாங்கள்“ எண்ட மகளின்டை குரல் அவரை அடக்கிச்சுது.

வாழை கட்டிக் கொண்டிருக்கேக்க வந்த வானில இருந்து பத்துப் பெடியள் இறங்க வீடே பரபரப்பானது. வந்தவங்கள் கமராவைத்தூக்கிக் கொண்டு போய் லைட்டைப் போட பொம்பிளை ஒரு மார்க்கமா வெளிக்கிட்டு வர, கலியாணம் தொடங்கப் போகுது நாங்கள் பிந்தீட்டம் எண்ட படி வாழைக்காரன் அந்தரப்பட்டான். “ஏன் இப்பிடி அரக்கப் பறக்க நிக்கிறீங்கள் கலியாணம் நாளைக்குத்தானே “ எண்ட படி ஐயா milo packet ஓட வந்து, “ஒண்டும் இல்லை இது ஏதோ pre wedding shooting ஆம் எண்டார். பத்தாதுக்கு பொம்பிளையின்டை மச்சாள் காரி “ என்டை கலியாணத்தில கொரனா எண்டு இப்பிடிச் செய்யேல்லை, இதோட நானும் எடுத்து அல்பத்தில பிறகு சேக்கிறன் “ எண்டு தானும் வெளிக்கிட்டு வந்தா.

படம் எடுத்த வீடியோக்காரன் படத்தோட நாளைக்கது ஆர் ஆர் எப்பிடி படம் எடுக்கேக்க என்னென்ன செய்யோணும் எண்ட “முறை தலையை “ எல்லாம் விளங்கப்படுத்த, “அண்ணை என்ன எண்டாலும் பரவாயில்லை நீங்கள் சொல்லிறபடி செய்யிறம் படங்கள் முக்கியம்“ எண்டு சொல்லிக்கொண்டிருந்த பொம்பிளைகளை சிரிப்போட பாவமாப் பாத்தாங்கள் வாழை கொண்டு வந்த பெடியள். வெளியில வந்த வீடியோக்காரன் குலையாப் பாத்து பச்சையும் மஞ்சளும் கலந்திருக்கு படத்துக்கு எடுப்பா இருக்காது எண்டான். நாங்கள் வேணும் எண்டால் மருந்து அடிச்சு விடிறம் நாளைக்கு முழு மஞ்சளா இருக்கும், ஆனால் என்ன வெட்டி வித்தால் ஒருத்தனும் வாங்க மாட்டான் எண்டான் வாழைக்காரன். “ஆனாலும் மஞ்சள் spray paint அடிச்சா படத்துக்கு நல்லா இருக்கும்“ எண்டு எல்லா முறையும் சொல்லித்தாற வீடியோ அண்ணா சொல்ல, வீட்டுக்காரர் painterகுச் சொல்லி அனுப்பிச்சினம். எல்லாத்தையும் பாத்துக்கொண்டிருந்த ஐயாவுக்கு அந்தக் காலத்துக் கலியாணத்தில வாழை கட்டிறது ஞாபகம் வந்திச்சுது. படலைக்கு ரெண்டு பக்கமும் இடம் பாத்து அலவாங்கு போடேக்க மண் கல்லு மாதிரி இருந்திச்சுது. தண்ணி விட்டு வைச்சிட்டு பிறகு கிடங்கை அலவாங்கால கிண்டி ஆழப்படுத்தி வைக்க வண்டில்ல வாழை வந்திறங்கிச்சுது. வாழையைப் பாத்திட்டு காத்தடிக்குது இன்னும் அரையடி தோண்டவேணும் எண்டு சொல்ல வேலை தொடந்திச்சுது. பெரிய தேவை க்கு எல்லாம் நீரவேலி சிறுப்பிட்டி தான் வாழைக்கு. அங்க கிணத்து இறைப்பில தான் வாழைத்தோட்டம் எல்லாம். கன இடத்தில பங்குக்கிணறு எண்டாலும் மூண்டு நாளைக்கு ஒருக்கா தண்ணி காட்டிற படியா தண்ணிச்சண்டை இல்லை. தண்ணி இறைக்கத் தொடங்கி பாத்தி நிரம்பி வழிய பாத்தியை மாத்தித் தண்ணி கட்டீட்டு கடைசிப் பாத்தி நிரம்பி வழிய இறைப்பு நிக்கும். வீட்டு மூலைக்க குளிக்கிற தண்ணீல வளருற மாதிரி இல்லை் வாழைத்தோட்டம் இறைக்கேக்க பாத்தி நிரம்பி வழிஞ்சோடும் வரை இறைக்கோணும். இரண்டு நாளைக்கு முதல் நீர்வேலித் தோட்டத்தில முத்தினகுலையாப் பாத்துச் சொல்ல, வெட்டிப் புகைபோட்டு பழுக்கப் பண்ணி அனுப்பி இருந்தான் தோட்டக்காரன். விசேசங்களுக்கு வாழையோட குலை வாங்கப்போனா குலை மஞ்சளா இருக்காது அளவான குலை, நிமிந்த வாழை முத்தின குலை எண்டு தேடிப்பாத்து வாங்க வேணும். பழுக்காத குலையை வாங்கிப் புகை போட்டுப் பழுக்க வைச்சுத் தான் கட்டிறது. புகை போடிறதுக்கு எண்டே தோட்டத்தில ஒரு இடம் இருக்கும்.



**Dr.T. கோபிசங்கர்**
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

வாழையை வெட்டி கிடத்திப்போட்டு குலையை மாத்திரம் கிடங்குக்க இறக்கி அடியிலேம் மேலேம் வாழை மடலைப் போட்டு மேல வாழைச்சருகால போட்டுப், பிறகு ஈரமண்ணைப் பரவிப் போட்டு மூட வேணும். கிடங்கின்டை ஒரு மூலையில இருக்கிற இன்னொரு சின்னக் கிடங்கில பொச்சு சருகு எல்லாம் வைச்சு தணல் கட்டையை வைச்சு மூடி விட சூட்டடுப்பு மாதிரி ரெண்டு கிடங்குக்கும் உள்ள connection ஆல புகை மட்டும் போகும்.

சூடு போனால் பழம் வெந்து போடும். உள்ள போன புகை கிடங்கெல்லாம் நிரப்பி வழையை பழுக்கப் பண்ணீட்டு கடைசீல எங்கயோ ஒரு மூலையால வெளீல வரத் தொடங்கும். கிடங்கில இருந்து புகை வரத் தொடங்க சின்னக்கிடங்கின்டை அடுப்பை அணைக்கோணும். இப்பிடி மூண்டு நேரம் புகை போட அரை மஞ்சள் நிறத்தில குலை இருக்கும். சாப்பிட பழம் வேணும் எண்டால் ரெண்டு நாளைக்குப் புகை போட வேணும்.

இறக்கின வாழையை நிமித்தி உயரம் பாத்து அடியால குறைச்சு நிமித்திக் கட்டீட்டு இலையைக் கட்டி இருந்த வாழைச் சருகை வெட்ட வாழை விரிஞ்சு நிண்டுது. நல்லது கெட்டது எண்டு வீட்டில, வெளீல நடக்கிற காரியங்கள் ,கோயில் காரியங்கள் எண்டு எல்லாத்திலேம் வாழை இருக்கும்.

கலியாணம் கோயில் எண்டால் கதலி, செத்தவீட்டுக்கு மொந்தன் வாழை,வாழை வெட்டுக்கு குலையோட வாழை எண்டு பாத்துப் பாத்து கட்டிறது.

அதோட வாழை கட்டிறதுக்கு எண்டு ஒரு குறூப்பும் இருக்கும், பழத்தைக் களவெடுக்கவும் ஒரு குறூப் திரியும்.

மதில் இல்லாத காலத்தில படலை இல்லாட்டி ஒழுங்கை வாசலில பனைமரம் நட்டு அதோட வாழையைச் சேத்துக்கட்டிறது. வாழையைக் கட்டீட்டு வாழை நாரால கட்டி இருக்கிற இலையை அவிட்டு விட, இலை எல்லாம் விரிஞ்சு வடிவா நிக்கும். பிறகு என்னெண்டால் வாழை கட்டினவன் பக்கத்து வீட்டை களவா புடிங்கி இளநீர்

12 ஆம் பக்கம் பார்க்க...








# யேர்மனியில் டோட்முண்ட் நகரில் திறந்த வெளியில் திருவள்ளுவருக்கு சிலை!



யேர்மனியின் டோட்முண்ட் நகரில் தமிழர்களின் கடைகள் நிறைந்துள்ள Rheinische Str இல் ஒரு திருவள்ளுவர் சிலையை அமைக்க வேண்டும் என்று இரண்டு ஆண்டுகளாக எடுத்து வரும் முயற்சி வெற்றி அடையும் நிலையை எட்டி உள்ளது.

வீதியின் முக்கியமான சந்தியில் திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கான இடத்தை டோட்முண்ட் நகர சபை ஒதுக்கித் தந்திருக்கிறது. அத்துடன் அத்திவாரத்திற்கும் சிலை அமையவிருக்கின்ற பீடத்திற்குமான செலவுகளை பொறுப்பெடுப்பதற்கும் நகரசபை முன்வந்திருக்கிறது.

சிலைக்கான செலவை நாம் பொறுப்பெடுக்க வேண்டும். அண்ணளவாக 20.000 யூரோக்கள் சிலை செய்வது தொடக்கம் அதைக் கொண்டு வந்து பொருத்துவது வரை முடிவாகும் என்று கணக்கிட்டிருக்கிறோம்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை 02.04.2023 அன்று எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், வர்த்தகர்கள் என்று பலர் கூடி திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு செய்ய வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராய்ந்தோம். சிலைக்கான நிதியை எவ்வாறு திரட்டுவது என்பது குறித்தும் ஆராய்ந்தோம்.

திருவள்ளுவர் எல்லோருக்கும் உரியவர் என்பதனால் குறிப்பிட்ட சிலர் மட்டும் பங்களித்து சிலை அமைப்பதை விட, சிறு துளி பெருவெள்ளம் என்பது போல் பலருடைய பங்களிப்புடன் சிலையை செய்வதே பொருத்தமாக இருக்கும் என்று தீர்மானித்திருக்கிறோம். யேர்மனியின் முக்கிய நகரங்களில் ஒன்றான டோட்முண்டின் மையப் பகுதியில், பல்லாயிரக்கணக்கான மக்கள் நடமாடும் ஒரு வீதியில் திருவள்ளுவர் சிலை அமையவிருக்கிறது என்பது தமிழர்கள் அனைவருக்கும் பெருமை தரும் ஒரு விடயமாகும். திருவள்ளுவர் சிலை அமைவதற்கு உலகத் தமிழர்கள் ஆதரவு தர வேண்டும். உங்களால் இயன்ற தொகையை நற்பணிக்கு வழங்கி, தமிழின் பெருமையை உலகில் நிலைநிறுத்துவோம்.



**Verein fuer tamilische Kuenstler e.V.**
**Volks Bank Dortmund Nord West**
**DE09 4406 0122 4086 4321 00**
**GENODEM1DNW**
**Paypal: paypalme/valluvar2023**

டோட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

கீபோர்ட் (Keyboard)
18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது. சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாயம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
16:00–17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும், இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche! Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
19:15– 20:15
6€ Pro Stunde
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

# ‘சாமி ஊருக்கு றிக்கற் கோடு’

## பெயர்கள் படும் பாடு!

நாட்டிய கலாநிதி
கார்த்திகா கணேசர்
(அவுஸ்திரேலியா)



**நாம்** இங்கு வெளி நாட்டில் வாழ்கிறோம். அவர்களின் பண்பாடு எம்மில் இருந்து வேறுபட்டது. இவர்கள் தம்மிலும் வயது கூடியோரைப் பார்த்து எவ்வித தயக்கமும் இன்றி அவர்களின் பெயரைச் சொல்லி அழைப்பார்கள். ஒரு 6 வயதுப் பையன் 60 வயது உளளவரைப் பார்த்து ‘ஜோன்’ என அழைப்பது சகஜம்.

எமது வீட்டுக் குழந்தைகளோ அப்படி அல்லாமல் அவரைத் ’தாத்தா’ என்று கூப்பிடுவார்கள். இது எமது பண்பு. பழக்க வழக்கமும் கூட. பெரியோரைப் பெயர் சொல்லி அழைப்பது அவரை மதியாதது போல எம் பண்பாட்டில் கருதப்படும். வயதுக்கேற்ப அக்கா, அண்ணா, மாமா, மாமி, பாட்டா, பாட்டி இப்படி ஒரு உறவு முறையில் அழைப்பது தான் நம் வழமை. மக்களின் பண்பாட்டிலே அவர்களின் பழக்கவழக்கங்களிலே இந்தப் பெயர்கள் படும் பாடு பெரிய பாடு.

ஒரு குழந்தை பிறந்ததும் அதற்கு ’நாம கரணம்’ அதாவது பெயர் சூட்டுகிறோம். ஆனால் அந்தப் பெயர்களோ சில சமயம் வசதிக்காகக் குறுக்கப்படுகிறது. மோகன சுந்தரம் மோகன் என்றோ சுந்தரமாகவோ ஆகி பின்பு சுந் ஆகவோ சுந்தா வாகவோ மாறுகிறது. இது வெகு சகஜம்.

சிலர் இறைவனின் பெயரைக் குழந்தைக்கு வைத்தால் குழந்தையின் பெயரைப் பல முறை அழைப்போம். குழந்தைக்கு ராமா அல்லது கிருஷ்னா எனப் பெயரிட்டால் ராமஜபம் ஆயிரம் தரம் பண்ண நேரம் கிடையாது, அதனால் இப்படிப் பெயர் வைப்பதால் இறைவனின் பெயரை அடிக்கடி கூறிக் கொள்ளலாம் என்பார்கள்.

ஒரே பெயரில் இருவர் இருந்து விட்டால் அதாவது குமார் என இருவர் இருந்து விட்டால் அவர்களைக் குறிக்கும் போது அவர்களின் அங்க அடையாளங்களோடு அவர்கள் பெயர் குறிக்கப்படும். கட்டை அல்லது குண்டு குமார், அல்லது நெட்டை, மொட்டை குமார் என சகஜமாக அழைப்பர். பாடசாலைகளிலோ எனில் ஆசிரியர்களுக்கும் அவ்வாறான பட்டப்பெயர்கள் அமைந்து விடும்.

சங்கீத உலகத்திலே தமது பெயருடன் தமது ஊர் பெயரையும் இணைக்கும் வழக்கம் உண்டு. மகாராஜபுரம் சந்தானம், செம்மாங்குடி ஸ்ரீநிவாச ஐயர், வழுவூர் இராமையாபிள்ளை... என அவை அமையும். ஆனால் இப்படியான மகா வித்துவான்கள் மேடையில் அமர்ந்திருக்கும் போது அவர்களைப் பற்றிப் பேசுவோர் மரியாதை கருதி அவரின் பெயரைக் கூறாது செம்மாங்குடி அவர்கள், வழுவூரார் அவர்கள் எனக் கூறுவது வழமை. இதன் மூலம் இந்த மகான்களைப் பெற்றெடுத்த ஊர்கள் பெருமை பெறுகின்றன. தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் பெருமைப்படுவதைக் கண்டிருக்கிறோம். இங்கோ ஊர் அல்லவா பெருமைப்படுத்தப் படுகிறது!. அந்தக் காலத்து



மனைவியர் கனவனின் பெயரை வாய் தவறியும் கூறி விட மாட்டார்கள். இதைச் சில பாட்டிகளிடம் இன்றளவும் காணலாம். Rail way station இல் றிக்கற் வாங்கப் போய் நிற்பார்கள். சிதம்பரத்துக்கோ அல்லது பழனிக்கோ அவர்கள் போக வேண்டி இருக்கும், கணவர் பெயர் சிதம்பரம் என்று வைத்தால் பாட்டி, ‘சாமி ஊருக்கு றிக்கற் கொடு’ என்பார். அதிகாரியும் ‘பெரியசாமியா? சின்னச் சாமியா?’ என்பார். பெரிய சாமி என்ரால் சிதம்பரம். சின்னச் சாமி என்றால் பழனி.



நாடோடி மக்களாக இருந்தவர்கள் குறவர். இவர்களைச் சென்னையில் சுமார் 20 வருடங்களுக்கு முன் ஆங்காங்கே காணலாம். கிளி சாஸ்திரம் சொல்வது, மணிமாலைகள் விற்பது இவர்களின் தொழில். குழந்தை எந்த ஊரில் பிறக்கிறதோ அந்த ஊரின் பெயரைத் தம் குழந்தைக்கு வைத்து விடுவது அவர்கள் வழக்கம்,. இதனால் இவர்களின் பெயர் மைலாப்பூர், திருவல்லிக்கேணி, மயிலாடுதுறை, குன்றத்தூர் என்றவாறாக இருக்கும்.

வேறு சில ஆதி வாசிகளோவெனில் அமாவாசையில் குழந்தை பிறந்தால் அமாவாசை எனவும் பௌர்னமியில் பிறந்தால் நிலவு எனவும் பெயர் வைப்பார்கள். எம்மவர்களோ குழந்தை என்ன நட்சத்திரத்தில் பிறக்கிறதோ அந்த நட்சத்திரத்தின் பெயரை பிள்ளைக்குச் சூட்டுவதும் வழக்கம்.ரோகினி, சுவாதி, விசாகன், அஷிவினி, பரணி போன்ற பெயர்கள் இன்றும் வழக்கத்திலும் புழக்கத்திலும் உள்ளன. குழந்தைக்குப் பேரன் பேத்திகளின் பெயரை வைப்பதும் மரபு. அதனால் தான் போலும் பேரர் என அழைக்கப்பட்டார்கள்!

இங்கு இந்த நாட்டில் ஒரு பெண் தனது Middle name பன்றி எனக் கூறிச் சிரித்தார். மும்பொரு காலத்தில் எத்தனை பன்றி வைத்திருக்கிறார்களோ அதை வைத்தே அவர்களின் செல்வம் மதிக்கப்பட்டது.



பன்றி செல்வத்தின் அறிகுறியாக அன்றய நாட்களில் இருந்தது. அதனால் பன்றி எனப் பெயரிட்டிருக்கிறார்கள் போலும்! நாம் தான்யா, தானியலக்ஷ்மி எனப் பெயரிடுவதில்லையா? அது மாதிரி!.

பிரபல நாடக ஆசிரியார் Shake Spair. shake என்றால் சுழட்டுவது. Spair என்றால் ஈட்டி. அந்தக் காலத்து ஆங்கிலேயர் அரச செய்திகளை மக்களிடம் எடுத்துச் செல்பவன் அரச பட்டயம் தாங்கிய ஈட்டியை சுழட்டிக் கொண்டு சென்று செய்தியை மக்களிடம் சொல்வானாம். இந்தத் தொழில் பெயரே நாடகாஆசிரியர் ஷேக்ஷ்பியரின் குடும்பப் பெயராயிற்று.


இன்று எம்மவர் Family Name ஐ வைத்துக் கொள்வதை நாகரிகமாகக் கருதி தமது தந்தையாரின் பெயரை பிள்ளைகள் வைத்துள்ளார்கள். இது ஒரு மேற்கத்திய நாகரிகத்தை பின்பற்றிய செயலே. அதற்கு மேலும் சிலர் சென்று தமது பிள்லைகளுக்கு தமிழ் பெயருடன் மேற்கத்தியப் பெயரையும் சூட்டி விடுகிறார்கள். மேற்கத்திய நாட்டில் வளரப்போகும் பிள்ளை தமிழ் பெயரைச் சொல்ல கேட்கும் ஆங்கிலேயர் அதைத் தவறாகக் கூறாமல் இருக்கட்டுமே! அதனால் ஒரு மேற்கத்திய நாமம்.காலத்திற்கேற்ப, வாழும் இடத்திற்கேற்ப எமது கலாசாரத்தில் ஏற்படும் மாற்றமே இது.

எனது மகனுக்கு அமிழ்தன் எனப் பெயரிட்டோம். பலர் அழகான பெயர் என்றார்கள்.பின் நாளின் Company யில் அவன் வேலை பார்த்த போது Kanesar Amilthan என்ற பெயரைக் குறுக்கி Kam. என ஆனான். அது Kanesar இலிருந்து Ka யும் Amilthan இலிருந்து Am உம் சேர்ந்து Kam ஆனது. அது இங்கு மிக வசதியாகி விட்டது. ஆனால் சில சமயம் 'kam here'எனத் தொலைபேசியில் கூறினால் மறுபக்கத்தில் உள்ள சீனப் பேர்வழி சீனன் என எண்ணித் தனது மொழியில் பேசத்தொடங்கி விடுவாராம்.இவ்வாறான அனுபவங்கள் உங்களுக்கும் நிறைய ஏற்பட்டிருக்குமே!

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளளோம்
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de

# சிறுவர் அமுதம் ஆசிரியர் சின்ன இராஜேஸ்வரன் மறைந்து 29 ஆண்டுகள்

(யேர்மனி)



ஐரோப்பாவின் சிறுவர்களுக்காக முதல் தமிழ் சஞ்சிகையை 1990ம் ஆண்டு ஆரம்பித்தவரும் எழுத்தாளர் கவிஞர் கட்டுரையாளர் இலக்கியவாதி மேடைப்பேச்சாளர் பட்டிமன்றப் பேச்சாளர் பொதுச்செயற்பாட்டாட்டாளர் சஞ்சிகை ஆசிரியர் இலங்கை வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் செய்தி ஆசிரியர் எனப் பன்முக ஆளுமைகொண்ட காலம் சென்ற சின்ன இராஜேஸ்வரன் மறைந்து இன்று 19.04.2023 இருபத்தொன்பது வருடங்கள் நிறைவை துயருடன் பகிர்ந்து கொள்கிறோம்.

அமரர் அவர்கள் யாழ்-அளவெட்டியைப் பிறப்பிடமாவும் நீண்டகாலம் கிளிநொச்சியில் குடியேறி வாழ்ந்தவரும் இலங்கையில் பல ஆண்டுகள் தபால் அதிபராகவும் கடமையாற்றியவருமாவார். நாட்டில் ஏற்பட்ட இனமோதல்களால் உயிராபத்து நிறையவே 1984ஆம் ஆண்டு யேர்மனிக்கு அகதியாக வந்தார்.




1985 - 1990 காலகட்டத்தில் ஐரோப்பாவில் சில தமிழ் சஞ்சிகைகள் கையெழுத்துப் பிரதிகளாக வெளிவந்த வேளையில் சிறுவர்களின் நலன்கருதி தூரநோக்கில் நம் சந்ததிச் சிறார்களின் தாய்மொழிக் கல்வியான தமிழை அழிய விடாது பாதுகாப்பதற்காக சிறுவர்களுக்காக 'சிறுவர் அமுதம்' என்னும் மாதாந்த சஞ்சிகையை ஆரம்பித்து ஐரோப்பாவில் சிறுவர்களுக்கான முதல் சஞ்சிகை என்ற பெருமையையும் பெற்றுக் கொண்டார். (மண் சஞ்சிகையும் இதே ஆண்டு இதே மாதம்தான் ஆரம்பிக்கப்பட்டது)

1990 தொடக்கம் 1994 வரைதான் இச்சஞ்சிகை வெளிவந்தது. காரணம் வாகன விபத்தில் அன்னார் காலமான செய்தி அன்றைய நாட்களில் தமிழை நேசித்த அத்தனைபேரையும் மிகவும்



பாதித்தது. காரணம் அன்று யேர்மனியின் பல பாகங்களிலும் வசித்து வந்த தமிழ்ப் பிள்ளைகளின் வாசிப்பு எழுத்துஅறிவியல் விடையங்களுக்கு பெரும் பங்களிப்புச் செய்தமையை யாரும் மறக்கமாட்டார்கள். பல நூறு தமிழ் பிள்ளைகள் இச்சஞ்சிகைக்கு எழுதிப் பயன் பெற்றார்கள்.சிறுவர் அமுதம் சஞ்சிகையின் 19911992 1993 ஆண்டு விழாக்களின் சிறுவர் மாணவர் போட்டிகளில் நானும் எனது மனைவியும் நடுவர்களாகச் சென்றிருந்தபோது பெருந்தொகை மாணவர்கள் போட்டிகளில் பங்கெடுத்தமையை நேரில் கண்டு வியந்தோம். தூரதிஸ்ட வசமாக எம்மை விட்டுப் பரிந்தது அமரர் இராஜேஸ்வரன் அவர்களின் இழப்பு ஐரோப்பிய தமிழ் உலகிற்குப் பேரிழப்பாகவே முடிந்தது. தாயகத்தில் வெளிவந்த முதலாவது சிறுவர் மாத இதழ் வெற்றிமணி (1950) என்ற வகையிலும் யேர்மனியில் வெளிவந்த முதலாவது சிறுவர் மாத சஞ்சிகை சிறுவர் அமுதம் என்ற வகையிலும் அதன் ஆசிரியர் அமரர் சின்ன இராஜேஸ்வரன் அவர்களை வெற்றிமணி நினைவு கூருவது மிகப்பொருத்தமானது.

**வ.சிவராஜா ஆசிரியர் -**
**மண் சஞ்சிகை -யேர்மனி.**

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மருத்துவப் பழம்

குடிச்சுப் பிடிபடப் போய் சமாளிக்கத்தான், குலை நுனியில இளநீர் கட்டத் தொடங்கிச் சினம் வடிவெண்ட பேரில. இப்ப கடைசியா வாழை தனிய, குலை தனிய வாங்கி கட்டிற நிலைமையும் வந்திட்டுது. ஆனா இப்ப என்னெண்டால் வீடியோக்காரன் சொல்லிறான் எண்டு என்னென்ன எல்லாம் செய்யினம் எண்டு யோசிச்ச படி நிண்ட ஐயாவுக்கு உள்ள வந்து Coat ஐ போடுங்கோ படம் எடுக்கவாம் எண்டு கூப்பிட ஓடிப் போனார்.


ஒரு காலத்தில வாழை இல்லாத வீடு யாழ்ப்பாணத்தில இல்லை. எங்கயாவது ஒரு குட்டியைக் கிளப்பிக்கொண்டு வந்து கிணத்து தண்ணி ஓடிற இடமாப்பாத்து வைக்க அது தானா வளரும். ஒண்டும் பராமரிக்கத்தேவை இல்லை. குலை போடுதா இல்லைப் பழுத்திட்டுதா எண்டு கூடப் பாக்கத் தேவையில்லை. காகம் குலையைக் கொத்தேக்க போய் வெட்டி னாச் சரி. வெட்டின குலை உடனயே சீப்பாகி அக்கம் பக்கம் எல்லாம் போயிடும் எண்ட படியால மிஞ்சிறதும் இல்லை அழுகியும் போறேல்லை. ஏனோ தெரியாது, வேலிச்சண்டை இருந்த காலத்திலேயும் வாழைச்சண்டை இருக்கேல்ல. பள்ளிக்கூடம் போற ஒவ்வொரு நாளும் மாஜரின் பூசின பாணுக்கு வாழைப்பழம் தான் காலமைச் சாப்பாடு. ஒரு றாத்தல் பாண்,மாஜரின் பக்கற், ஒரு சீப்புக் கதலிப்பழம் இப்ப சாப்பிட" எண்ட சம்பாசணை எல்லா வாழைப்பழக்கடையிலும் காலமை கேக்கலாம். வாங்கிற அரைக்கிலோ பழத்துக்கு கடையில பழம் ஒண்டு தாங்கோ சாப்பிட்டுப் பாப்பம் எண்டு கேக்க முடியாது, ஆனாலும் வாழைப்பழம் வாங்கிறதுக்கும் ஒரு முறை இருக்கு. எல்லாக் கடையிலேம் வாழைப்பழம் வித்தாலும் ஊருக்குள்ள ஒரு வாழைப்பழக்கடை இருக்கும். "இப்ப சாப்பிட, இரவுக்கு, நாளைக்கு கோவிலுக்கு, ரெண்டு மூண்டு நாள் வைச்சுச் சாப்பிட "எண்டு தேவைக்கு ஏத்த மாதிரி எல்லா ளவயபந லும் வாழைப்பழம் அங்க எப்பவும் இருக்கும். தலைகுனிஞ்சு போற சின்னக்கடை மிச்சச் சுண்ணாம்பு பூச்சில வெள்ளையான குறுக்க மரத்தில தொங்கிற முடிச்சுக்களில வாழைக்குலைகள் தொங்கும்.

கோயில் தேவைக்கு இடைப்பழம் பழுத்த கதலிக் குலையில வாங்கிற சீப்பு இரண்டாம் நாள் நிறத்து சரியா இருக்கும். கோயில் அருச்சனைக்கு எண்டாக் கதலி தான். கதலிப் பழம் எவ்வளவு பழுத்தாலும் காம்பில இருந்து கழராது அழுகும்வரை. ஆனால் தோல டக்கெண்டு கறுக்க வெளிக்கிட்டிடும். சுடச்சுட இறக்கின அரிசிமாப் புட்டுக்கு திருவின செத்தல் தேங்காயப் பூவோட ரெண்டு பழத்தை உரிச்சு சீனியும் கொஞ்சம் போட்டுக் குழைச்சுச் சாப்பிட கதலி தான் சரி. பழம் கூடப்பழுத்திரு ந்தா வாய்ப்பன் சுடலாம். வயித்தாலை போகாட்டி இதுதான் மருந்து. சபையில வைக்கிறதும் இந்தக் கதலிப் பழம் தான்.

கப்பல் பழம் முழுக்க மஞ்சளா இருக்கும். கலியாண வீட்டுத் தட்டத்துக்கு தேடி வாங்கிறது. அதோட நல்லாப் பழுத்த பழம் சிலநேரம் முத்தி வெடிச்சும் இருக்கும். நுனீல இருக்கிற கறுப்பு விழுந்தாத் தான் அது பழம். கப்பல் பழம் எவ்வளவு பழுத்தாலும் லேசில கறுக்காது, சீப்பில இருக்கிற ஒரு பழத்தில கையை வைக்க அது கையோட கழண்டு வந்தால் சரியான பதம். கப்பல் சாப்பிட்டாப்பிறகும் வாய் ஒரு கரகரப்பா இருக்கும். கப்பல் பழம் சூடு எண்டு சொல்லி வயித்தாலை அடிக்கு தேடி வாங்குவினம்.கூவக்கட்டு, பொக்குளிப்பான் எண்டால் குளிர்மை எண்டு இதரை தருவினம். அப்ப இதரை பெரிய பழம், தாரை விட்டு தோலை மட்டும் உரிச்சு சாப்பிடுறது. சாப்பிட்டு முடிக்க ஐஞ்சு நிமிசம் வேணும். ஆனாலும் இப்ப வாறது பழைய இதரை இல்லை. தொங்க விட்ட குலையில இருந்து பழுக்கத் தொடங்க இதரைப்பழம் பொத்துப் பொத்தெண்டு விழும். சாப்பிடேக்கேம் சாப்பிட்டாப் பிறகும் ஒரு புளிப்புத் தன்மை இருக்கும்.

ஏதோ மருத்துவப் பழம் புதுசா ஒண்டை சனம் ஏமாந்து வாங்குது.

சீனிக்கதலிக்கு நடுவில சின்னச்சின்ன கொட்டைகள் இருக்கிறதால பெரிசா demand இல்லை.பச்சையா இருக்கிற யானை வாழை எண்பதுகளின் கடைசீல தான் ஊரப்பக்கம் கூட வரத்தானது. ஆனாலும் எங்கடை ஒவ்வொரு பழத்துக்கும் ஒவ்வொரு மரு(க்)த்துவத் தன்மை இருக்கிறது தெரியாம இப்ப ஏதோ மருத்துவப் பழம் புதுசா ஒண்டை சனம் ஏமாந்து வாங்குது.


லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam

தமிழ் எங்கள் உயிரின் இருப்பு

லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam

Opening Time;
Saturday's between 1:30 PM and 5 PM.

Telefon: 07723 957543

THE DE LA SALLE ACADEMY, Carr Ln E, Croxteth , Liverpool L11 4SG, UK

அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



## எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 26

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

# பாரதி காட்டிய தொழில் செய்யும் வழி

“செய்யும் தொழில் உன்தொழிலே காண் சீர்பெற்றிட நீ அருள் செய்வாய்“ என்ற பாரதியின் மந்திரச் சொல் அறநெறி நின்று உழைக்கும் உளங்களுக்கு மேலும் மேலும் வலிமை சேர்க்கிறது.

செய்கின்ற தொழில் அனைத்துமே இறைவனது செயல் என எண்ணும் போது “ நான் “ எனும் அகந்தை அழிகிறது. செய்கின்ற செயல்கள் அனைத்திலும் உண்மை ஒளி வீசிகிறது. அச்செயல் மீது நம்பிக்கை பிறக்கிறது.

நம்மை இயக்கும் பரம்பொருளின் முன் முழுவதுமாய் சரணடையும் தன்மை எழுகிறது.

இவ்வண்ணம் செயல் புரியும் போது உயர்விற்கான வழியினை அப்பரம் பொருளே எமக்கு அருளும் எனும் திண்மை மலர்கிறது. இதுவே பாரதி காட்டிய தொழில் செயும் வழி.

பாரதியின் விநாயகர் நன்மணி மாலையின் சுவை எல்லையற்றது. அதில் பொருட்சுவை சொற்சுவை என அத்தனையும் நிரம்பி நிரதி போல் நிற்கும்.ஒவ்வொரு சொல்லிலும் பொதிந்துள்ள தத்துவச்சுவை அபாரமானது. ஆழச் சிந்திக்கத் தூண்டி அகத்தூய்மை தரவல்லது. உணரும் ஞானம் வந்தால் இன்பம் வரமாகும்.


இங்கு பாரதி தன் அடிப்படைத் தொழிலாக எதனைக் குறிப்பிடுகிறார் பாருங்கள்.

> **“ நமக்குத் தொழில் கவிதை**
> **நாட்டிற் குழைத்தல்**
> **இமைப் பொழுதுஞ்**
> **சோரா திருத்தல்“**

ஆம்,நம் ஆத்மாவை மகிழ்விக்கக் கூடிய செயலைச் செய்ய வேண்டும். அதாவது நம்மை நாம் மகிழ்விக்கத் தெரிய வேண்டும். அதே சமயம் பிறருக்காகவும் நாட்டுக்காகவும் பணியாற்ற வேண்டும்.உளத்தையும் உடலையும் சோரவிடாது எக்கணத்திலும் சக்தியுடன் இயக்கப் பழகவேண்டும். இம்மூன்று செயல்களுமே எம்முள் எழவல்ல எதிர்மறை எண்ணங்களைத் தூரவிரட்டவல்லது என்று அறிந்து தெளிந்து சொல்லியிருப்பார் நம் ஞானபாரதி.

நம் பேராசைகள் எல்லாம் நிறைவேற வேண்டும் என்ற சுயநல வேட்கையோடு இறையுடன் வணிகம் செய்து பக்தர் என்று தம்மைச் சொல்லித் திரிவோர்க்கு இறைவனிடத்தே நாம் வைக்கக் கூடிய பெரும் பிரார்த்தனை என்னவாக இருக்க முடியும். ? என்ற விசாலத்தைக் காட்டுகிறார். எல்லா உயிர்களும் இன்பமெய்த வேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்திப்பதே தொழிலெனக் கொண்டு மகிழ்ந்து வாழ்வேன் என்று பாரதி கூறும் மெய்த்தொழில் எல்லோரும் ஒன்றெனும் அத்வைதம் காட்டி நிற்கிறது.

> **“ உயிரெலாம் இன்புற்றிருக்க**
> **வேண்டி இருதாள்**
> **பணிவதே தொழிலெனக் கொண்டு**
> **கணபதி தேவா! வாழ்வேன்**
> **களித்தே“**
>
> **“ பக்தி யுடையார் காரியத்திற்**
> **பதறார் மிகுந்த பொறுமையுடன்**
> **வித்து முளைக்குந் தன்மைபோல்**
> **மெல்லச் செய்து பயனடைவார்**
> **சக்தி தொழிலே அனைத்துமெனிற்**
> **சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்?**
> **வித்தைக் கிறவா!கணநாதா!**
> **மேன்மைத் தொழிலிற்**
> **பணியெனையே.“**



துன்பத்திற்கான மூலமே நம் மனம் தானே.யாவுமே இறை செயல் என்று வாழ்ந்தால் துன்பம் நம்மை ஒருபோதும் அணுகாது.அதே போல் நாம் செய்யும் தொழில் மேன்மையுடையதாக இருக்க வேண்டும்.நன்மையும் இன்பமும் தரவல்லதாக அமைய வேண்டும். அத்தகு தொழிலில் என்னை இயங்கச் செய்வாய் என இறைவனைப் பணிகிறார்.

> **“செய்யாள் இனியாள் ஸ்ரீதேவி**
> **செந்தா மரையிற் சேர்ந்திருப்பாள்,**
> **கையா ளெனநின் றடியேன்செய்**
> **தொழில்கள் யாவும் கைகலந்து**
> **செய்வாள்“**

தாம் செய்யும் தொழிலால் செல்வம் செழிக்கும் என்ற நம்பிக்கை மட்டுமா சரஸ்வதி இனிய கவிதைகளை தந்து கொண்டே இருப்பாளாம்,சக்தி துணை நிற்பாளாம். முப்பெருந்தேவிகளையும் ஒருசேர ஆரதித்துப் பணிந்தேத்திய வரல்லவா.

தன்னறத்துடன் தொழில் புரிந்தால் வேண்டியன யாவும் கிட்டும், சகல தெய்வங்களும் துணை நிற்கும்.

ஆகவே அன்பானவர்களே! நாம் எப்படி இருக்க வேண்டும் என்றால் பரம்பொருளைப் பணிந்து பக்தியுடன், நல்லனவற்றை மட்டும் தொழிலாகச் செய்ய வேண்டும். அதன்வழி நாம் எதிர்கொள்வதும் நமக்கு வருவதெல்லாமே அந்தப் பரம்பொருள் தருவன. ஆதலால் வருவதை இன்பமுடன் ஏற்றுக்கொண்டால் வாழ்தல் இனிதாகும்.

“ திருவைப் பணிந்து, நித்தம் செம்மைத் தொழில் புரிந்து, வருவது வருக என்றே மகிழ்வுற்று இருக்க வேண்டும்‘ “


“வேர்ப்ப வேர்ப்ப பொருள் செய்வதொன்றையே மேன்மை கொண்ட தொழிலெனக் கொண்டனன் “

வியர்க்க வியர்க்க வேலை செய்து பொருள் சம்பாதிப்பது மட்டுமே உயர்வான தொழில் என்று கொண்டவர்களே!

இத்தரை மீதினில் அமரசுகம் பெறும் உயர்வான தொழில் யாதெனக் காட்டித் தரும் பாரதியின் வழியை சற்று சிந்திப்போமா ??

அனைத்துக்கும் மேலாய் நாம் எல்லோரும் இயல்பாகவே செய்ய வேண்டிய தொழில் ஒன்று உண்டு .

“ உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்! “



## வெற்றிமணி திருமண சேவை




யேர்மனியில் Hannover நகரில்
(Techniker beim Ingenieurbro) தொழில் புரியும்,
1992 ஆண்டு பிறந்த எங்கள் மகனுக்கு, நற்குணம்
வாய்ந்த கற்ற மணமகள் தேவை.
பெற்றோர் தாயகத்தில் பொன்னாலை சுழிபுரம்
கிராமத்தை சேர்ந்த சைவ வேளாளர்.
பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:- +49 173 820 2856






அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்







## தொழிலாளர் தினம்

# விடுமுறைகள் அர்த்தம் தெரியாமலே கழிந்து போகின்றன!

## நடுப்பக்கம்



சேவியர்
(தமிழ்நாடு)

இரண்டு நண்பர்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்துக் கொண்டால் என்ன பேசுவார்கள் ?

“டேய் மச்சி.. எப்படிடா இருக்கே ?“ என்பது முதல் கேள்வி.“என்னடா பண்றே“ என்பது இரண்டாவது கேள்வி.

இந்த இரண்டு கேள்விகளைத் தாண்டித்தான் பெரும்பாலான உரையாடல்கள் அடுத்த கட்டத்துக்குச் செல்லும்.

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில்

உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்“ என்றார் பாரதியார்.

நமக்கு தொழில் என்பது வருமானத்தை ஈட்டும் ஒரு விஷயம் மட்டுமல்ல. அது நமது அங்கீகாரம். நமது வாழ்வின் ஒரு அடையாளம். வேலையில்லாமல் இருப்பது என்பது நமது பொருளாதாரத்தோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல, அது நமது சுயத்தையும் சார்ந்தது.

இது இன்று நேற்று தொடங்கியதல்ல. தானே ஒரு தொழிலாளியாய் மாறி உலகத்தை உருவாக்கினார் கடவுள். ஆதாமைப் படைத்து சர்வமும் நிரம்பியிருந்த ஏதேன் தோட்டத்தில் வைத்தவர், கூடவே “இந்தத் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் வேண்டும்“ என ஒரு கட்டளையையும் கொடுத்தார். உழைப்பின் தேவை கடவுளிடமிருந்து ஒரு கட்டளையாகவே மனிதனுக்கு வந்தது. இயேசுவும் தனது இளமைக் காலத்தில் ஒரு தச்சுத் தொழிலாளியாக பணியாற்றினார்.

இந்து மதமும் உழைப்பின் மகிமையைப் பேசுகிறது. இறைவனே இங்கு விஸ்வகர்மா எனும் முதல் தொழிலாளியாக பரிமளிக்கிறார். “உழைத்து உண்ணும் உணவே நீங்கள் சாப்பிடுகின்ற உணவில் மிகச் சிறந்ததாகும்“ என்றார் நபிகள் நாயகம். இப்படி உழைப்பு என்பது ஆன்மீகம் சார்ந்த ஒரு பரிணாமத்தையும் பெற்று விடுகிறது.

உழைப்பு தான் உலகின் வளர்ச்சியை நிர்ணயிக்கிறது. ‘உழைக்காதவன் உண்ணலாகாது‘ என்பதன் காரணம், உழைப்பு என்பது நமது கடமையாய் மாற வேண்டும் என்பது தான். நாம் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு பொருளுக்குப் பின்னாலும் தொழிலாளிகளில் வியர்வையும், கலையும், பெருமூச்சும், கண்ணீரும் கலந்திருக்கிறது.

ஒரு தொழிலாளி சிரிக்கும் போது இறைவன் சிரிக்கிறார். ஒரு தொழிலாளி கண்ணீர் விடும்போது அவர் கண்ணீர் விடுகிறார். தொழிலாளிகளின் வியர்வையைச் சுரண்டி அதில் மெத்தை அமைத்துத் தூங்கும் ஏகாதிபத்ய சிந்தனைகளை எதிர்த்து நின்ற வரலாறு



ஏராளம் உண்டு. அந்த எதிர்ப்புகளின் நினைவலைகள் தான் தொழிலாளர் தினமாக மிளிர்கிறது.

ஒரு நாளை மூன்றாகப் பிரியுங்கள். ஒரு எட்டில் உழையுங்கள். ஒரு எட்டில் ஆனந்தமாய் இருங்கள். ஒரு எட்டில் நிம்மதியாய் உறங்குங்கள். இது தான் ‘வேலை வாழ்க்கை சமநிலை‘ பேணும் ஒரு நல்ல முறை. ஆனால் தொழிலாளர்களோ 12 முதல் 20 மணி நேரம் வரை கடுமையாக உழைத்து, களைத்து, போதிய வருமானமும் இல்லாமல் ஆனந்தத்தையும், உறக்கத்தையும் தொலைத்து வாழ்ந்தார்கள்.

1806ம் ஆண்டு இந்த நசுக்குதலுக்கு எதிரான முதல் குரல் அமெரிக்காவில் ஒலித்தது. ஒலித்த குரல்களில் குரல்வளைகள் நெரிக்கப்பட்டன. ஆனாலும் நீறு பூத்த நெருப்பு போல குரல்கள் வலுவடைந்தன. 1837ல் அமெரிக்காவில் ஒரு சட்டம் இயற்றினார்கள். இனிமேல் பத்து மணி நேரம் தான் வேலை. ஆனால் அது அரசுப் பணியாளர்களுக்கு மட்டும் என அந்த அறிவிப்பு பிரகடனம் செய்தது. மற்றவர்கள் உதாசீனம் செய்யப்பட்டார்கள். 1956ம் ஆண்டில் தான் ஒட்டுமொத்த தொழிலாளர்களுக்கும் விடியல் கிடைத்தது. அந்த தினம் மே 1 ! தொழிலாளர் தினம் !!

வியர்வையும், ரத்தமும், கண்ணீரும் கலந்த வரலாறு தொழிலாளர் தினத்துக்கு உண்டு. ஆனால் இன்று பெரும்பாலும் இந்த தினம் மறக்கப்பட்ட ஒரு தினமாக மாறிவிட்டது. ‘ஏண்டா இது சம்மர் ஹாலிடேஸ்ல வருது. ஒரு லீவ் வேஸ்ட் ஆகுது‘ என மாணவர்களும். ‘சம்.. லேபர்ஸ் டே மேன்... மூவி போலாமா?“ என இளைய தலைமுறையினரும் பேசிவிட்டுக் கடந்து போகும் ஒரு தினமாக இந்த நாள் மாறிவிட்டது.

“தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்“ என மீண்டும் ஒரு குரல் ஒலிக்க வேண்டிய தேவை இன்று

17 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்




# விடுமுறைகள் அர்த்தம் தெரியாமலே கழிந்து போகின்றன!

உண்டு.முதலாளிகளின் கார்களுக்குக் கீழே கம்பளம் விரிக்கும் இன்றைய நிறுவனங்களும், ஊடகங்களும், அரசியல் தலைவர்களும் ஏழைகளின் நலனையோ தொழிலாளர்களின் நலனையோ கருத்தில் கொள்வதில்லை. ஆலைத் தொழிலாளி அழிந்தால் என்ன நான் ஆஸ்திரேலியாவிலிருந்து ஆடையை இறக்குமதி செய்வேன் எனும் சிந்தனை தான் அவர்களுக்கு.

விவசாயி பட்டினியின் ஆடையை உடுத்திக் கொண்டு, எலிகளைத் தின்று வாழ்க்கை நடத்துகையில், பணப் பெருச்சாளிகளின் பாக்கெட்களில் அரசாங்கம் இளைப்பாறுகிறது. கிரிக்கெட் வீரர்களின் ஏழாவது காதலிக்குக் கிடைக்கும் முக்கியத்துவத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட பட்டினியால் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயியின் உயிருக்குக் கிடைப்பதில்லை.

டீபை டிழுளள இல் லயிக்கும் தமிழனுக்கு தொழிலாளியின் உயிர் ஊசலாடுவதைக் காண மனம் வருவதில்லை. அதனால் தான் தொழிலாளர்களின் போராட்டங்களோ, அவர்களுடைய கடையடைப்பு போராட்டங்களோ, உண்ணாவிரதங்களோ எப்போதும் பிசுபிசுத்துப் போகின்றன. ஏற்காடு போன்ற தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையை விட ஐ.பி.எல் ஆட்டங்களே மக்களுக்கு முக்கியமாகிப் போகிறது.

ஏதோ ஒருவயலில் உழைத்து கண்ணீர் பாசனம் செய்து நெல் விளைவிக்கும் விவசாயி நமது சகோதரன் எனும் எண்ணம் நமக்கு வரவேண்டும்.காய்கறி விலை ரொம்ப ரொம்ப மலிவு என குதூகலிக்கும் போது, ‘ஐயோ ஆண்டு முழுவதும் இதை பயிரிட்ட உழைப்பாளியின் வீட்டில் ஏதேனும் மிஞ்சியிருக்குமா ? அவனுக்கு கொள்முதல் விலையால் ஏதேனும் பயன் கிடைத்திருக்குமா?“ எனும் பதட்டம் வரவேண்டும்.

ஒரு தொழிலாளியின் குடும்பம் பட்டினியால் வாடும் போது நமது உணவு தொண்டைக் குழியில் ஒரு நங்கூரம் போல கனக்க வேண்டும்.பசியென ஒருவன் இறந்தால், அதற்காக ஒட்டுமொத்த மனித சமூகமும் அவமானப் பட்டு முகத்தைப் பொத்த வேண்டும்.என் சம்பளம், என் வேலை, என் கேளிக்கை, என் குடும்பம் என்ற நிலையைத் தாண்டி சக மனிதனின் வாழ்க்கை மீது சுயநலம் தாண்டிய கரிசனை வரவேண்டும்.

பத்துப் பாத்திரம் தேய்க்கும் ஒரு ஏழைப் பெண்ணிடம் எக்காரணம் கொண்டு கடிந்து பேசாத, அவளை குடும்பத்தில் ஒருத்தியாக நினைக்கும் இளகிய மனசு வரவேண்டும்.

நமது குழந்தைகளுக்கு அழகிய ஆடை எடுக்கும் போது கந்தல் ஆடையின் கண்ணீர் துளிகளில் வாடும் ஏழைச் சிறுமியும் நினைவில் வரவேண்டும்.இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் பிறருக்கான கரிசனையில் ஒவ்வொருவரும் இறங்கினால் சமூகம் எனும் குடும்பத்தில் நிலை மகிழ்ச்சி உருவாகும். அதுவே இறைவன் விரும்பும் உலகம்.

“தொழிலாளிகளே ஒன்றுபடுங்கள்“ எனும் கோஷங்கள் மட்டும் போதாது ! “தொழிலாளிகளுக்காக ஒன்றுபடுங்கள்“ எனும் ஒரு கோஷமும் இன்று மிகவும் தேவையாகிறது. ஏனென்றால் தொழிலாளர்கள் என்பவர்கள் நம் உயிரின் நீட்சி, இந்த புவியின் மாட்சி. தொழிலாளர்களுக்குத் தோள் கொடுக்க வேண்டாம்.இதயங்களைக் கொடுப்போம்.

---





# கீரிமலையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருவுருவச்சிலை திறந்துப்பு

சிவபூமியில் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருவுருவச்சிலை சிவ பூமி அறக்கட்டளை ஊடாக அன்பளிப்பு செய்யப்பட்டு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களால் (14.04.2023) திறந்து வைக்கப்பட்டது.

நாவலர் பெருமான் சைவநெறி தழைத்தோங்கவும், தமிழ் மொழி செழித்து வளரவும் பெரும் பணியாற்றியவராவார்.

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தப்பிள்ளை, சிவகாமி அம்மையார் ஆகிய இருவருக்கும் புதல்வனாக 1822ம் ஆண்டு அவதரித்தார்.

இலங்கையும், இந்தியாவும் அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்த போது சைவமும், தமிழும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கிய காலப் பகுதியிலே தோன்றியவர் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.வரலாற்றுக்கு முற்பட்ட சமயமாகவும், ஈழம் வாழ் மக்களின் பெரும்பாலானோரது உள்ளத்துள் ஒளி விளக்காய் சுடர்விட்டிலங்குவதுமான சைவ சமயம் அந்நியரது செல்வாக்கு வலிவுற்றிருந்த காலத்தில் சிறிது நலிவுற்றிருந்தது. இலங்கைக்கு வர்த்தக நோக்கோடு வந்த அந்நிய ஆட்சியாளர் அரசியலாதிக்கத்தைக் கைப்பற்றவும் தற்சமயம் கொள்கையை பரப்பவும் எண்ணங்கொண்டு கல்வி வழிப்பிரசாரம் செய்யத் தலைப்பட்டனர்.

அந்நியவெற்று நாகரீகப் போக்கில் ஈடுபாடு கொண்ட மக்கள் சுயமசய கலாசார வழிகளை மறந்து வாழ்வாராயினர்.

இவ்வாறு சைவ சமயம் நலிவுற்றிருந்த வேளையில் நாவலர் பெருமான் தனது சொல்லாலும் எழுத்தாலும் மக்கள் அகக் கண்களைத் திறந்து அவல நிலையை அவர்களுக்கு உணர்த்தியதோடு சைவமும், தமிழும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்காக தம்மாலியன்ற அத்தனை பணிகளையும் செய்தார். அவரின் கல்விப் புலமையையும், நாவன்மையையும், சைவத் தமிழ் பணிகளையும் பாராட்டி திருவாடுதுறை ஆதீனம் அவருக்கு ‘நாவலர்‘ என்ற பட்டத்தை வழங்கியது.

சைவம் காத்த நாவலர் பெருமானை சைவமக்கள் ஐந்தாம் சமயக்குரவர் எனப் போற்றுகின்றனர்.சிவ சமயத்தை அழிய விடாது பாதுகாக்க நாவலர் பல முயற்சிகளை மேற்கொண்டார். சைவ சமயத்தவர் ஒரு சிலரிடம் காணப்பட்ட தவறான பழக்க வழக்கங்கள், செயல்கள் என்பவற்றை நீக்க முயன்றார். சைவப் பாடசாலைகளை நிறுவினார். திருக்கேதீஸ்வரம், கீரிமலைச் சிவன் கோயில் என்பனவற்றின் தொன்மைச் சிறப்புக்களை மக்களுக்கு எடுத்துக் கூறி அவற்றைப் புனரமைத்து நித்திய, நைமித்திய பூஜைகளுக்கு வழிவகுக்குமாறு சைவ மக்களுக்கு விஞ்ஞாபனம் விடுத்தார். தம் வாழ்நாள் பூராவும் தமிழுக்கும் சைவத்துக்கும் சேவையாற்றி வந்த நாவலர் பெருமான் 1879ம் ஆண்டு கார்த்திகை மாதம் மக நட்சத்திரத்தில் இறை பதம் அடைந்தார்.

நன்றி : ஈழத்து வரலாறும் தொல்லியலும்

---




## வெற்றிமணி திருமண சேவை

நன்கு படித்த, Master முடித்த யோ்மனியில் Bonn நகரில் வேலை செய்யும் 1993 ஆம் ஆண்டு பிறந்த சைவ வேளாளர் பெண்ணுக்கு (உயரம் 171 cm) சிறந்த மணமகன் தேவை Nordrhein-Westfalen மாநிலத்தில் உள்ளவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
அமரன் 01731833664




யோ்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாளர் 28 வயது நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற பட்டதாரி மணமகன் தேவை. தற்போதைய பாடசாலையிலேயே தொழிலைத் தொடரக்கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கிறோம்.
பெற்றோர் தொடர்பு கொள்ளவும்.
4915774318528

Wirtschaftsingenieur ஆக Frankfurt நகரில் வேலை செய்யும் 34 வயதுடைய சைவ வேளாளர் பெண்ணுக்கு தற்போதைய இடத்தில் வேலை தொடரக்கூடிய பட்டதாரி மணமனை எதிர்பாக்கின்றோம்.
பெற்றோர் தொடர்பு கொள்ளவும்: 4915774318528


அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்




# இசைகேட்டால் நுண்ணறிவு (IQ) அதிகரிக்கும்!

## இசைக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் என்ன?

உங்களுக்குப் பிடித்த பாடல் என்ன? அம்மம்மாவைக் கேட்டால் “பச்சைக் கிளி முத்துச்சரம் முல்லைக்கொடி யாரோ“ பிடிக்கும் என்பார். அப்பாவிடம் கேட்டால் “வா வெண்ணிலா உன்னைத் தானே வானம் தேடுதே“ என்பார். அதுவே ஒரு இளைஞரிடம் கேட்டால் “போற போக்கில் ஒரு லுக்க விட்டு என்ன செஞ்சிட்டாளே, என்ன செஞ்சிட்டாளே“ என்பான். தமிழர்களிடம் மட்டும் இல்லை, இந்த உலகில் யாரைக் கேட்டாலும் சரி, இசையைப் பிடிக்காதவர்கள் இருக்கவே மாட்டார்கள். அனைவருக்கும் பிடித்த பாடல்கள், பிடித்த பாடகர், பிடித்த இசையமைப்பாளர் என இருக்கத்தான் செய்யும். ஆனால், ஏன் எல்லோருக்கும் இசை என்றால் பிடிக்கிறது? சிலருக்கு இசை ஒரு போதை போன்று மகிழ்ச்சியைக் கொடுக்கிறதே. இசையில் அறிவியல் ரீதியாக அப்படி என்ன தான் இருக்கிறது?

இசை எல்லோருக்குமே புரிகின்ற ஒரு மொழி என்றே கூறலாம். வார்த்தைகளால் நமது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதை விட இசையால் வெளிப்படுத்துவது மிகவும் இலகுவாக இருக்கும். அடிப்படையில் இசை என்பது வேறு ஒன்றும் இல்லை: பல ஒலி அதிர்வெண்கள் (audio frequency) கலந்து விதம் விதமான வடிவங்களில் காற்றில் மிதந்து நமது செவிகளை அடைவதைத் தான் இசை என்று கூறுகின்றோம். நமது கண்கள் ஒளியை எவ்வாறு செயலாக்கம் செய்கின்றனவோ, அதே போன்று தான் நமது காதுகளும் ஒலியைச் செயலாக்கம் செய்கின்றன. உண்மை சொல்லப் போனால் நாம் பிறப்பதற்கு முன்பே இசையைக் கேட்க ஆரம்பித்து விடுகின்றோம். என்ன நண்பர்களே, புரியவில்லையா? நாம் நமது தாயின் கருப்பையில் இருந்த போது, நமது கண்களால் ஒன்றுமே பார்க்கமுடியாமல் இருந்தோம். ஆனால், நாம் நமது காதுகளால் எப்போதுமே இசையை ரசித்துக் கொண்டு தான் இருந்தோம். அது வேறு ஒன்றுமே இல்லை, நமது தாயின் இதயத்துடிப்பு தான். எப்போதுமே நமக்கு தாலாட்டுபோல் அந்த இதயத் துடிப்பின் இசையில் நாம் உறங்கிக் கொண்டு இருந்திருக்கிறோம்.



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

மனித உடலில் இருக்கும் ஒரு சுவாரசியமான குணம் என்னவென்று தெரியுமா? உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான சம்பவங்கள் நமது உடலுக்குள் நடைபெறும்போது நமது மூளை மகிழ்ச்சி மற்றும் திருப்தி போன்ற உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகிறது. உதாரணத்திற்குப் பசிக்கும் போது நாம் தேவைக்கு ஏற்ற மாதிரி உணவு அருந்திவிட்டதும் நமது பசி தீர்ந்துவிட்டு, உடனடியாக சந்தோஷமும் திருப்தியும் அடைந்து விடுகின்றோம்.

ஆனால், உண்மையில் அந்நேரம் என்ன நடைபெறுகிறது என்றால் டோபமீன் (dopamine) எனப்படும் வேதியியல் பொருள் நமது மூளைக்குள் வெளியிடப்படுகிறது. இது நரம்புக்கடத்தியாக (neurotransmitter) பணி புரிந்து இந்தச் சந்தோஷமும் திருப் தியும் கலந்த உடல்நிலைக்குக் காரண மாக இருக்கிறது. இதேப்போன்று தான் போதைப்பொருட்கள் பாவிக்கும் வேளையில் டோபமீன் வெளியிடப்பட்டு நாம் வானத்தில் மிதப்பது போல் இருக்கிறது.

நமது உடலில் அந்தப் போதைப்பொருள் குறையும்போது டோபமீன் வெளியிடுவதும் நிறுத்தப்படுகிறது. எனவே, தொடர்ந்து மகிழ்ச்சி நிலையை அடைவதற்காக மேலும் அந்தப் போதைப் பொருளை உள்வாங்க வேண்டியதாகிவிடும். அத்துடன் நமது உடலும் அந்தப் போதைப்பொருளுக்கு அடிமை ஆகி விடுகிறது.

இதில் சுவாரசியமான விஷயம் என்ன தெரியுமா? நாம் இசையை ரசிக்கும் போது நமது உடலில் பல செயல்கள் நடைபெறுகின்றன. இரத்த அழுத்தம் அதிகரித்து நமது மூளையில் உள்ள பல்வேறு பகுதிகள் இயங்கத் தொடங்கி விடுகின்றன. இசை, நாம் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானது இல்லை என்றாலும், அதை ரசிக்கும் போது நமது மூளையில் டோபமீன் வெளியிடப்படுகிறது. அதன் விளைவு என்னவென்று உங்களுக்கு இப்போது புரிந்திருக்கும். அதாவது, நாம் மகிழ்ச்சி கலந்த திருப்தி நிலையை அடைந்து விடுகின்றோம். இன்று வரை அதன்

28 ஆம் பக்கம் பார்க்க...







யேர்மனி வூப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்கா அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் 2023

கொடி: 12.05.2023 வெள்ளி
தேர்: 20.05.2023 சனி

| | | | |
|---|---|---|---|
| 12.05.2023 | வெள்ளி | 1 ஆம் திருவிழா | (கொடியேற்றம்) |
| 13.05.2023 | சனி | 2 ஆம் திருவிழா | (கற்பகதருக் காட்சி) |
| 14.05.2023 | ஞாயிறு | 3 ஆம் திருவிழா | (முப்பெருந்தேவியர் காட்சி) |
| 15.05.2023 | திங்கள் | 4 ஆம் திருவிழா | (சிவலிங்க பூஜா காட்சி) |
| 16.05.2023 | செவ்வாய் | 5 ஆம் திருவிழா | (தேசிக்காய் விளக்குப் பூஜை) |
| 17.05.2023 | புதன் | 6 ஆம் திருவிழா | (கைலாசவாகனக் காட்சி) |
| 18.05.2023 | வியாழன் | 7 ஆம் திருவிழா | (மாவிளக்குப் பூஜை) |
| 19.05.2023 | வெள்ளி | 8 ஆம் திருவிழா | (மாலை வேட்டைத் திருவிழா) |
| 20.05.2023 | சனி | 9 ஆம் திருவிழா | (தேர் திருவிழா (வெளி வீதி) |
| 21.05.2023 | ஞாயிறு | 10 ஆம் திருவிழா | (தீர்த்த திருவிழா) |
| 22.05.2023 | திங்கள் | 11 ஆம் திருவிழா | (பூங்காவனம் மாலை) |
| 23.05.2023 | செவ்வாய் | வைரவர் பொங்கல் மடை, வடைமாலை பூஜை | |

Hünefeld Str 63b 42282-Wuppertal Tel: 479 60 17

அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2023 ஆம் ஆண்டின் அதி உன்னத புத்தம் புது டிசைன்கள் எமது கையிருப்பில்



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்




கௌசி (யேர்மனி)

# உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல

செல்வங்களிலே தலைசிறந்த செல்வம் குழந்தைச் செல்வம். குழந்தைகள் எமக்கு திரவியம் போன்றவர்கள் என்றும் தம்முடைய சொத்து என்றும் பெற்றோர்கள் கருதுகின்றார்கள். தம்முடைய சொத்துக்களைப் பாதுகாப்பது போலவே பிள்ளைகளை தமக்குள்ளே பூட்டி வைத்து பிள்ளைகளின் எண்ணங்களுக்குத் தாமே வேலி போட்டுத் தம்முடைய உணர்வுகளை அவர்களிடம் புதைக்கின்றார்கள். அளவு கடந்த பாசத்தை அவர்களில் கொட்டி வளர்க்கின்றார்கள். அவர்களுடைய எதிர்காலம், அவர்களுடைய சிந்தனை என்று எதனையுமே சிந்திப்பதில்லை

குழந்தைகள் பற்றி 1902 ஆம் ஆண்டு உலகப் புகழ் பெற்ற சூஃபிக் கவிஞர் கலீல் ஜிப்ரான் அவர்கள் எழுதிய ஒரு கவிதை இருக்கின்றது. இந்தக் கவிதையை டென்மார்க் வைத்தியசாலையில் விளம்பரப் பலகையில் எழுதி வைத்திருக்கின்றார்கள்.

உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல. அவர்கள் இயற்கையின் (கடவுளின்) குழந்தைகள் உங்கள் மூலமாக வந்திருக்கிறார்களே அன்றி உங்களிடம் இருந்து அல்ல. உங்களுடன் இருந்தாலும் உங்களுக்குச் சொந்தமானவர்கள் அல்ல. உங்களுடைய அன்பை அவர்களுக்குத் தரலாம். உங்களுடைய எண்ணங்களை அல்ல. அவர்களுக்கு என்று தனிச்சிந்தனைகள் உண்டு. உடலுக்குத்தான் பாதுகாப்புத் தர முடியும் ஆன்மாக்களுக்கு அல்ல. இதில் அற்புதம் என்னவென்றால், நீங்கள் வில். உங்களிடம் இருந்து எய்யப்படும் உயிருள்ள அம்பு குழந்தைகள். அம்பு எதை அடைய வேண்டும் என்ற இலக்கை வில் தீர்மானிப்பதில்லை. அம்பை எய்பவன் தான் தீர்மானிப்பான். நீங்கள் அம்பை எய்பவன் அல்ல. நீங்கள் அந்த வில்லுத்தான். அந்த அம்பை எய்பவரை நீங்கள் இயற்கை என்று எடுத்துக் கொண்டால் இயற்கை. கடவுள் என்றால் கடவுள். இதனையே இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களும் கூறுகின்றார்.

இந்த வாசகங்களைப் பாாத்த பின்னும் கூட எமது பெற்றோர்கள் குறிப்பாக புலம்பெயர்ந்த எமது பெற்றோர்கள் தோளிலே பிள்ளைகளின் புத்தகப்பையைத் தூக்கிக் கொண்டு சுமை சுமை தாங்கியாவதுடன் பிள்ளைகள் படிக்க வேண்டி சங்கீத சுரவரிசைகளைத் தாமும் பாடம் பண்ணிப் பிள்ளைகளுக்குக் கொடுக்கின்ற வலிகள் ஏராளமாக இருக்கின்றன. தம்மால் முடியாதவற்றைப் பிள்ளைகளில் ஏற்றித் துன்புறுத்துவதை காணக்கூடியதாக இருக்கின்றது. ஆம் இங்கு வசதி வாய்புக்கள் இருக்கின்றன, முடியாதவற்றை முடித்துக்காட்ட வழி முறைகள் இருக்கின்றன. ஆனால், அதி



கமான பிள்கைள் வெளியே தெரிந்தும் தெரியாமலும் மனநோய்க்கு உட்பட்டிக்கின்றார்கள். தம்முடைய கைகளை பிளேட்டினால் கீறிக் கொள்ளுகின்றார்கள். மனநிலைத் தாக்கங்கள் உடனே வருவதில்லை. சிறுவயதுப் பாதிப்புக்கள் வளர்ந்த பின்னே பாரிய விளைவுகளைத் தருகின்றன. என்னுடைய ஐடயமமலைய ஆயயடயயை யூரியூப் சனலில் இருவரைப் பற்றி கூறியிருக்கின்றேன். திரும்பவும் அவற்றை எழுத வேண்டாம் என்று நினைக்கின்றேன்.

1. ஆண்களைத் தொடர் கொலை செய்த Jeffrey Dahmer
2. Serial Killer Charles cullen/ அமெரிக்காவை உலுக்கிய சம்பவம் காரணம் என்ன

தற்போது புலம்பெயர்ந்த நாடுகளிலே நடைபெறுகின்ற தற்கொலைகள், கொலைகளுக்கு போர் பாதிப்பினால், அடங்கிக் கிடந்த உள்மனப் போராட்டங்களே காரணங்களாக கருதப்படுகின்றது.இப்போது அந்தத் தாக்கம் பெரியவர்களிடம் இருந்து வெளிப்படுவதாகவும் அவர்களின் பிள்ளைகளுக்கு இவர்கள் மூலமாகக் கடத்தப்படுவதாகவும் கருப்படுகின்றது.

பிள்ளை சாப்பிட வேண்டும் என்றால், பிள்ளைகளுக்கு கைத்தொலைபேசியைப் போட்டுக் காட்டியபடி உணவு ஊட்டும் வழக்கம் எம்மவர்களிடம் இருக்கின்றது. அப்பிள்ளை கைத்தொலைபேசி இல்லாவிட்டால் உணவருந்த மாட்டாது. இவ்வேளை திடீர் ஞானம் வந்த பெற்றோர், கைத்தொலைபேசியை மறைத்து வைத்துவிட்டு உணவு கொடுக்கும் போது பிள்ளை அடம்பிடிக்கின்றது. சிறிது நேரம் பார்த்து விட்டு பிள்ளை சாப்பிடவில்லை என்று கைத்தொலைபேசியை மீண்டும் பிள்ளையின் கையில் கொடுக்கின்றனர். பிள்ளையும் சிரித்து மகிழ்ந்து தன்னை மறந்து உணவருந்தும். ஒரு பழக்கத்தை ஒருவர் மறப்பதற்கு 21 நாட்கள் எடுக்கும் என்று உளவியலாளர்கள் கருதுகின்றார்கள். ஆனால், 10 நிமிடம் பார்த்து விட்டு மீண்டும் கொடுக்கின்ற போது தான் அடம்பிடித்தால், மீண்டும் பொருள் கிடைக்கும் என்னும் உத்தியைப் பிள்ளை புரிந்து கொள்ளும். கட்டுப்பாடு முள்ளந்தண்டு போன்றது என்பதைப் பெற்றோர் அறிந்திருக்க வேண்டும். தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும். இந்தப் பழக்கம் நாளடைவில் வளர்ந்து பெரியவர்களான பின் பெரிய விடயங்களுக்குத் தொடரும்.

**படைப்புப்பல படைத்துப்
பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர்
ஆயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,
இட்டும் தொட்டும், கவ்வியும், துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்,
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்
தாம் வாழும் நாளே.**

பலவற்றையும் படைத்துப் பலரோடும் சேர்ந்து உண்ணும் பெருஞ்செல்வம் உள்ளவரானாலும் என்ன? மெல்ல மெல்லக் குறுகுறு நடந்து சென்று தம்முடைய சிறிய கையை நீட்டி, உணவருந்துகின்ற பாத்திரத்திலிருக்கின்ற நெய்யுள்ள சோற்றிலே கையை வைத்து அந்தக் கையாலேயே பெற்றோரைக் கட்டிக்கொண்டும், வாயாற் கவ்வியும், கையால் அளைந்தும், பிள்ளையானது தம்முடைய உடம்பெல்லாம் சிதறடிக்கின்ற போது உணவு வீணாகப் போகிறதே என்ற நினைவை பெற்றோருக்குத் தோன்றாது மயக்கி இன்பத்தால் மகிழச் செய்யும் மக்களை இல்லாதவர்க்கு தாம் வாழுகின்ற நாட்களெல்லாம் பயனில்லாத நாட்கள். இப்படியான குறும்பு செய்த குழந்தையை சமூகக் குற்றவாளியாக மாற்றாமல் இருப்பது பெற்றோர்களின் கையிலேதான் தங்கியிருக்கின்றது.







அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## சிலைகளும் அரசியலும்

தீவுப் பகுதிக்குச் செல்பவர்கள் மனதில் நாக பூசணி அம்மன் பதிய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்த சிலை அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கலாம். அல்லது புத்தர் சிலை ஒன்று அங்கு வைக்கப்படலாம் என்பதால், அதனை முந்திக்கொண்ட செயற்பாடமாகவும் இருக்கலாம்.

புத்தாண்டு தினத்தன்று அதிகாலையில் இந்தச் சிலை பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் கம்பீரமாகக் காணப்பட்டபோது,அது இந்தளவுக்கு சர்ச்சையை ஏற்படுத்தும் ஒரு விடயமாக மாறும் என யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

இந்த சிலையை அமைத்தது யார் என்பது இன்றுவரை தெரியவில்லை. ஆனால், அது திடீரென அமைக்கப்பட்ட ஒன்றல்ல என்பது அந்தச் சிலையைப் பார்க்கும்போது தெரிகின்றது. மிகவும் நேர்த்தியாக சிறப்பான சிற்ப வேலைப்பாடுகளுடன் அந்தச் சிலை அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சிலை அமைக்கப்பட்ட பின்னர் உருத்திரசேனை என்ற அமைப்பினர் அதற்கு பாலாபிஷேகம் செய்யப்போய் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்கள். அந்த அமைப்பின் உறுப்பினர்கள் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு மூன்று மணி நேரத்துக்கும் அதிகமாக விசாரணைக்குள்ளாக்கப்பட்டனர். அந்த சிலையை செய்தது யார் என்பதோ அல்லது அங்கு கொண்டுவந்து வைத்தது யார் என்பதோ தமக்குத் தெரியாது எனத் தெரிவித்த உருத்திரசேனை அமைப்பினர், பாலாபிஷேத்தை மட்டுமே தாம் செய்ததாகக் கூறியிருக்கின்றார்கள்.



இந்த சிலையை அகற்றுவதற்காக பொலிஸார் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. அதனையடுத்து நீதிமன்ற உத்தரவை அவர்கள் பெற்றார்கள். கடந்த செவ்வாய்கிழமை இந்த வழக்கு யாழ். நீதிமன்றத்துக்கு வந்தபோது, மே மாதம் 4 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட இந்த வழக்கில் இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், என். சிறீகாந்தா உள்பட 15 வரையான சட்டத்தரணிகள் முன்னிலையா கினர். முறைப்பாட்டாளர் இன்றி பொலிஸார் இந்த வழக்கை தொடுக்க உரிமை இல்லை என்ற கருத்தை சட்டத்தரணி சுமந்திரன் முன்வைத்து வாதத்தை தொடக்கினார். தொலைபேசி மூலம் தமக்கு முறைப்பாடு கிடைத்ததாகவும் வன்முறைகள் ஏதும் ஏற்படக்கூடாது என்று தெரிவித்தே தாம் வழக்கு தொடுத்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து சட்டத்தரணிகள், சுமந்திரன், சிறீகாந்தா ஆகியோர் வாதங்களை முன்வைத்தனர். சிலை வைக்கப்படுவதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்றும் ஆனால்,அதற்கு உரிய அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து வழக்கு தொடர்பில் எழுத்துமூல சமர்ப்பணங்களை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து இந்த வழக்கை எதிர்வரும் மே 4ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். இந்தவிவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து செயற்பட்டிருந்தமை மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்திருக்கின்றது. இந்து அமைப்புக்களும் விட்டுக்கொடுப்பதில்லை என்ற உறுதிப்பாட்டுடன்தான் நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தார்கள்.



பண்ணைப் பகுதியில் அமைக்கப்பட்ட இந்த அம்மன் சிலை குறித்து புதிய வரலாற்றுத் தகவல் ஒன்றை இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்திதானந்தம் தெரிவித்திருக்கின்றார். அவர் தெரிவித்திருப்பது இதுதான் –

“யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்த அருள்மிகு நாகபூசணித் திருவுருவம் வரலாற்றுச் சிறப்புடைது. மகாவம்சம் கூறும் மகோதரனும்

குலோதரனும் அவன் முன்னோரும் வழிபட்டது. அத்திருவுருவத்தை முதலில் அழித்தவர் போர்த்துக்கேயக் கத்தோலிக்கர். ஒல்லாந்தர் காலத்திலும் அருள்மிகு நாகபூசணித் திருவுருவத்தை மீளமைக்க வில்லை. ஆங்கிலேயர் காலத்தில் பண்ணையில் அருள்மிகு நாகபூசணித் திருவுருவத்தை மீளமைத்தனர். மகாவம்சம் கூறும் நாக மன்னர்களான மகோதரனும் குலோதரனும் முன்னோரும் வழிபட்ட திருவுருவத்தையே மீளமைத்தனர்.

பண்ணைப் பாலம் கட்ட முன்பு,படகில் மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு செல்வோர் பண்ணைக் கடலைக் கடந்தனர். அருள்மிகு நாகபூசணி திருவுருவத்தை வணங்கியே – வழிபட்டே படகுகளில் ஏறினர். அங்கிருந்து படகுகளில் வந்து கரையிறங்கி யாழ்ப்பாணம் செல்வோரும் வணங்கி வழிபட்டு மாநகர் புக்கனர்.“

இவ்வாறு மறவன்புலவு சச்சி சொல்லியிருக்கின்றார். அரச திணைக்களங்கள் முன்னெடுக்கும் பௌத்த சிங்கள மயமாக்கலுக்கு எதிர்வினையாற்றுவதற்கு தமிழர்களும் தயாராகிவிட்டார்கள் என்பதைத்தான் இவை உணர்த்து கின்றனவா?








அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# யாழ்ப்பாணத்து கிணற்று நீரைக் குடிக்கலாமா?

கடந்த ஆண்டின் இறுதியில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அது தொடர்பாக மேடைகளில் பேசியுமிருக்கிறார். அவர் கூறியதன் சுருக்கம் வருமாறு "தண்ணீர் போத்தல் வியாபாரிகள் யாழ்ப்பாணத்தை மட்டுமல்ல வடமாகாணம் முழுவதையும் இப்பொழுது ஆக்கிரமித்து, நிறையப் பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். யாழ்ப்பாணத்துத் தண்ணீரைப்போல சுவையான தண்ணீர் ஒரிடமும் இல்லை என்று பேசப்பட்ட பல நூறு ஆண்டு வரலாறு பாழடைந்து விட்டது. யாழ்ப்பாணத்துக் கிணற்றுநீரைக் குடிக்கலாமா? இதுபற்றி உடனடியாக யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை சார்ந்தவர்கள், விவசாயத் துறை சார்ந்தவர்கள், பொருளியல் துறை சார்ந்தவர்கள், அரசியல் பிரமுகர்கள் ஒன்று கூடித் தெளிவுபடுத்த வேண்டும். குடாநாட்டில் மக்கள் குடிநீரை

**நிலாந்தன் (இலங்கை)**

எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது சம்பந்தமாக ஒரு தெளிவுறுத்தல் கூட்டத்தை நடத்தி, ஊடகங்கள் ஊடாக தண்ணீரைப் பாவிக்கலாமா ?என்ன செய்யலாம்? போத்தல் தண்ணி கலாச்சாரம்தான் இனி எங்களுடைய கலாச்சாரமா? அந்த போத்தல் எங்கிருந்து உற்பத்தி ஆகிறது? எப்படி யாழ்ப்பாணத்திற்கு விற்பனைக்கு வந்து சேருகிறது? என்பவற்றைத் தெளிவுபடுத்துங்கள்".

ஆறு.திருமுருகன் மேற்கண்டவாறு கேட்டு கிட்டத்தட்ட இரண்டு மாதங்களின் பின் கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் தேதி ஒரு செய்தி வெளிவந்தது. அதில், வடமாகாணத்தில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் பாதுகாப்பானதா என உறுதிப்படுத்துமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வடமாகாண நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை வடக்கு மக்களுக்கு விநியோகிக்கும் குடிநீர் பாதுகாப்பானதா என்பது தொடர்பில் ஒரு வாரத்துக்குள் அறிக்கை தர வேண்டும் என்றும்பிரதேச சபைகள் ஊடாக வழங்கப்படும் குடிநீர் தொடர்பிலும் அறிக்கை தருமாறும் ஆளுநர் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அச்செய்தி கூறுகிறது.

மேலும், வடமாகாணத்தில் பொதுமக்களுக்கான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் பிரதேச சபைகள், மாகாண மற்றும் மத்திய அமைச்சின் கீழ் செயல்படும் அனைத்து





நிறுவனங்களும் 13 வாரத்துக்கு ஒரு தடவை குடிநீரின் தர நிர்ணயம் தொடர்பில் அறிக்கை வழங்க வேண்டும் என்றும் ஆளுநர் கேட்டுள்ளார். அது மட்டுமல்லாது வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் தொடர்பில் ஆய்வு அறிக்கை வழங்க வேண்டும் என்றும், குறித்த செயற்பாட்டினை வடக்கு மாகாண பிரதம செயலாளர் உள்ளூர் ஆட்சி அமைச்சின் செயலாளர், மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் கண்காணிக்க வேண்டும் என்றும் ஆளுநர் பணித்துள்ளதாக அச்செய்தி மேலும் கூறுகிறது

ஆறு.திருமுருகன் கூறுவதுபோல, ஒரு காலம் கோயில் கிணற்று நீரைத் தீர்த்தம் என்று குடித்த மக்கள் இப்பொழுது தண்ணீர்ப் போத்தல்களை விரும்பி நுகர்ந்து வருகிறார்கள். தண்ணீர்ப் போத்தல் கலாச்சாரத்தால் முதலாவதாக, உள்ளூர்க் கிணறுகளில் உள்ள தண்ணீர் சுத்தமற்றது என்று நிராகரிக்கப்படுகிறது. இரண்டாவதாக, பிளாஸ்டிக் பிரயோகம் அதிகரிக்கிறது. மூன்றாவதாக, போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீர் விரயம் செய்யப்படுகிறது. எவ்வாறெனில், ஒரு போத்தலில் வழங்கப்படும் தண்ணீரை அனைவரும் முழுமையாக அருந்துவார்கள் என்று இல்லை. ஒருவர் அருந்திய போத்தலை இன்னொருவர் அருந்த மாட்டார். அதனால் மிச்சம் விடப்படும் நீர் விரயமாகிறது. நாலாவது, தண்ணீர் போத்தல் பாவனையால் தென்னிலங்கை முதலாளிகள் லாபம் ஈட்டுகிறார்கள். ஐந்தாவது, பாவனையில் உள்ள தண்ணீர்ப் போத்தல்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி உற்பத்தி செய்யப்பட்டவையா என்பதனைத் தொடர்ச்சியாக யார் கவனிப்பது?

தண்ணீர்ப் போத்தல் எனப்படுவது உதிரியானது அல்ல. அது ஒரு உலகப் பொது நடைமுறை. அது ஒரு கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்றது. அது நகரமயமாதல், உலகமயமாதலின் விளைவு. நமது கொண்டாட்டங்களை, நிகழ்வுகளை மண்டபங்களில் ஒழுங்குபடுத்தும்போது அந்த மண்டபத்துக்குரிய பக்கேஜ்/க்குள் தண்ணீர் போத்தலும் அடங்கும். எனவே தண்ணீர்ப் போத்தல் கலாச்சாரம் என்பது உள்ளூர் வளங்களை நிராகரிக்கும் உலகமயமாதலின் விளைவுகளில் ஒன்று. எப்பொழுது மனிதர்கள் "ஃபாஸ்ட் பூட்" கலாச்சாரத்துக்கு பழக்கப்பட்டார்களோ, எப்பொழுது மனிதர்கள் பேரங்காடிகளின் நுகர்வோராக மாறினார்களோ, அப்பொழுதே தண்ணீர்ப் போத்தலும் நமது வாழ்வில் ஒரு பகுதியாக, எமது நிகழ்வுகளின் ஒரு பகுதியாக எமது கொண்டாட்டங்களில் ஒரு பகுதியாக மாறிவிட்டது. எனவே தண்ணீர்ப் போத்தலை நிராகரிப்பது அல்லது உள்ளூர்க் கிணறுகளுக்குத் திரும்பிச் செல்வது என்பது ஒரு விதத்தில் உள்ளூர்மயமாதல்,

24 ஆம் பக்கம் பார்க்க...






23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## யாழ்ப்பாணத்து



அல்லது உலக மயமாதலின் தீய விளைவுகளை நிராகரித்தல் என்ற ஒரு புதிய பண்பாட்டுப் போக்கிற்குள் அடங்கும்.

எனவே தண்ணீர்ப் போத்தல்களுக்குப் பதிலாக உள்ளூர்க் கிணறுகளை நோக்கித் திரும்புங்கள் என்ற அழைப்பு தனிய ஒரு மதப்பெரியார் ஆகிய ஆறு திருமுருகனிடமிருந்து வந்தால் மட்டும் போதாது. அது ஓர் அரசியல்.அது ஒரு புதிய பண்பாட்டுக்கான அழைப்பு. அது ஒரு புதிய வாழ்க்கை முறைக்கான அழைப்பு. எனவே அதை ஒரு கூட்டுச் செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும்.

உள்ளூர் வளங்களை நிராகரித்தல் அல்லது அவமதித்தல் அல்லது உள்ளூர் வளங்களை உலகத் தராசுகளில் வைத்து நிறுத்தல் என்பது ஈழத் தமிழர்களுக்கு மட்டும் உரிய ஒரு போக்கு அல்ல. உள்ளூர் நீர் மூலங்கள் அசுத்தமானவை அல்லது உலக சுகாதார அளவுகோள்களின் ஊடாக பரிசோதிக்கப்படாதவை என்ற கருத்து படித்த தமிழர்கள் பலர் மத்தியில் உண்டு.

குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழர்கள் விடுமுறைக்கு நாடு திரும்பும்போது ஒரு கையில் தண்ணீர் போத்தலோடுதான் வருகிறார்கள். தண்ணீர் போத்தலோடுதான் எங்கும் திரிகிறார்கள்.அவர்கள் தங்கும் வீடுகளில் அவர்களுக்கென்று போத்தல் தண்ணீரை உறவினர்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள்.அவர்கள் உள்ளூர் கிணற்று நீரை நுகர மாட்டார்கள். எந்த நீரில் அவர்கள் பிறந்தார்களோ, எந்த நீரில் அவர்கள் வளர்ந்தார்களோ, அந்த நீரையே அவர்கள் இப்பொழுது சுகாதாரமற்றது என்று நிராகரிக்கக் காண்கிறோம்.

எனவே உள்ளூர் வளங்களையும் உள்ளூர் அறிவையும் உள்ளூர்த்தனங்களையும்,உள்ளூர்ப் பண்பாடுகளையும் உள்ளூர்ச் சாப்பாட்டையும் மேலுயர்த்தும் ஒரு கூட்டுச் செயற்பாட்டின் ஒரு பகுதிதான் உள்ளூர் நீர் மூலங்களுக்கு திரும்பிச் செல்வது என்பது.அதைத் தனியாக ஒரு ஆறு திருமுருகன் மட்டும் செய்ய முடியாது. சம்பந்தப்பட்ட திணைக்களங்களும், துறை சார் நிபுணர்களும், சமூகத்தின் எனைய கருத்துருவாக்கிகளும், ஏனைய மதத் தலைவர்களும், அரசியல்வாதிகளும் இணைந்து அதை ஒரு கூட்டுச் செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும்.

மிகக்குறிப்பாக ஆறு திருமுருகன் தன் அறிக்கையில் கேட்டிருந்தது போல யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள துறைசார் நிபுணர்கள் யாழ்ப்பாணத்தின் உள்ளூர் நீர் மூலங்கள் சுகாதாரமானவையா என்பதனை நிரூபிக்க வேண்டும். அதே சமயம் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் வெளியில் இருந்து வரும் தண்ணீர் போத்தல்கள் சுகாதாரமானவையா என்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும்.

உள்ளூர் நீர் மூலங்கள் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் சந்தேகங்களை நீக்க வேண்டிய பொறுப்பு இச்சமூகத்தில் வாழும் துறைசார் நிபுணர்களுக்கு உண்டு. இது தொடர்பில் ஏற்கனவே உள்ளூர் துறைசார் நிபுணர்கள் கவனிக்கத் தவறிய ஒரு விடயத்தை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். ஒரு காலம் யாழ்ப்பாணத்தின் அடையாளமாக போற்றப்பட்டது முள்முருக்கு. ஆனால் இப்பொழுது நாட்டில் முள்முருக்கு அரிதாகிவிட்டது. முள்முருக்கை ஏதோ ஒரு நோய் தாக்கியது. அதன் விளைவாக அதன் இலைகள் சுருளத் தொடங்கின. இது தொடர்பில் யாழ் பல்கலைக்கழகமும் உட்பட சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் யாராவது ஏதாவது நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா? முள்முருக்கு எனப்படுவது நமது திருமண வீடுகளில் கன்னிக்காலுக்கு பயன்படுத்தப்படுவது.இப்பொழுது பாரம்பரிய முள்முருக்கு இல்லாத காரணத்தால் சோடினை முள்முருக்கை நாங்கள் பயன்படுத்தத் தொடங்கி விட்டோம். இனி ஒரு காலம் பிளாஸ்டிக் முள்முருக்கையும் பயன்படுத்த வேண்டி வருமா?

முள்முருக்கு, தமிழ் மக்களின் பாரம்பரிய நீர் மூலங்கள் போன்றவை தொடர்பில் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் பொதுவெளியில் உரையாட முன்வர வேண்டும். இதுதொடர்பில் வரும் சனிக்கிழமை 11ஆம் தேதி யாழ்.கோவில் வீதியில் அமைந்துள்ள,அகில இலங்கை இந்துமாமன்ற யாழ். பிராந்திய நிலையத்தில் ஒரு கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு நூல் வெளியீடு. கலாநிதி ஆறு திருமுருகன் எழுதிய திருக்கேதீஸ்வர இலக்கியம் என்ற ஒரு நூலை வெளியிட்டு வைக்கும் அந்நிகழ்வில் பொறியியலாளர் சர்வராஜா நினைவுப் பேருரை ஆற்றுகிறார். “யாழ் நீர் வளங்களின் மீதான ஆபத்துக்களும் வாய்ப்புகளும்“ என்பது அந்த நினைவுப் பேருரையின் தலைப்பு ஆகும். தமிழ் மக்களின் உள்ளூர் நீர் மூலங்களின் மீதான விழிப்பை ஏற்படுத்தும் விதத்தில் அதுபோன்ற கருத்தரங்குகளை ஆர்வமுள்ளவர்கள் ஒழுங்குபடுத்த வேண்டும்.இது ஒரு பொது விவாதமாக மாற்றப்பட வேண்டும். குடிக்கும் நீரின் நல்லது கெட்டது தெரியாத ஒரு சமூகமா நாங்கள் ?

nillanthan.com





# என் மகனுக்கு
# ஞெது 6வது கவிதை

வாழ்க்கையில்
காதலி
ஒரு நாள்
யாரோவாகி
நகர்ந்துவிடக்கூடும்

சினேகிதி
ஒரு நாள்
நெஞ்சைக் குடையும்
வஸ்துவாகிவிடக்கூடும்

ஆசிரியர்
ஒரு நாள்
சபித்துச் செல்லக்கூடும்

மனைவி
ஒரு நாள்
வேறு ஒருத்தியாக
வாழத் தொடங்கக்கூடும்

உறவுகள்
ஒரு நாள்
தூரத்தில் புள்ளியாகி
மறைந்து போகக்கூடும்

நலம்விரும்பிகளும்
பார்க்கவே விரும்பா
மனிதர்கள் ஆகக்கூடும்

எமது
முன்மாதிரிகள்
வெறுப்பின் உச்சமாகத்
தெரியத் தொடங்கலாம்
மாணவன்
குருவையே
விமர்சிக்கத் தொடங்கும்
நாள் வரலாம்

ஏதோ ஒரு நாளில் தான்
அன்புகள்
பிரம்மாஸ்திரங்களாய்
உருமாறுகின்றன

நீ கடவுளானால் மட்டுமே
கடந்து செல்லல்
நிகழும்

கருணை மட்டுமே
கடவுள்.

**கவிதா லட்சுமி**
**(நோர்வே)**








அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# செப்பேடுகளில் எழுதி வைத்ததாகக் கல்வெட்டுகள் கூறிய தேவாரத் திருமுறைகள் இப்போதுதான் கிடைத்துள்ளன!

**மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் பழமை வாய்ந்த சட்டநாதர் கோயிலில், 22 ஐம்பொன் சிலைகள், 55 பீடம், 100க்கும் மேற்பட்ட செப்பேடுகள் மற்றும் பூஜை பொருட்கள் கண்டெடுப்பு 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக இருக்கலாம் என கருதப்படுகிறது.**



திருஞானசம்பந்தப் பெருமானின் திருவருள் எங்கும் பொலிகிறது ! எங்கள் சைவ மரபின் தலைமைக் குரவரான சம்பந்தப் பெருமான் அவதரித்தருளிய சீர்காழியில் தேவாரப் பாடல்கள் எழுதப்பட்ட 400க்கும் மேற்பட்ட செப்பேடுகள் கிடைத்துள்ளன.

தமிழக வரலாற்றிலேயே இத்தகைய அற்புத நிகழ்வு இதற்கு முன் நடந்ததில்லை என்று சொல்கிறார்கள். தேவாரத் திருமுறைகளை செப்பேடுகளில் எழுதி வைத்ததாக கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆனால் இப்போதுதான் முதன் முறையாக தேவாரத் திருப்பாடல்கள் எழுதப்பட்ட செப்பேடுகள் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் கிடைத்துள்ளன.

இவற்றில் இதுவரை கிடைக்காத தேவாரப் பாடல்கள் உள்ளனவா என ஆய்வு செய்ய வேண்டும். புதிய பாடல்கள் கிடைப்பின் அவை நம் பன்னிரு திருமுறை அச்சுப் பதிப்பில் சேர்க்கப்பட்டு பரப்பப்பட வேண்டும். பொதுவாக, ஞானசம்பந்தப் பெருமான் சைவ மரபின் தலைமை குருநாதராகவும் ஸ்கந்த வடிவமாகவும் குறிப்பிடப்பட்டாலும், எம் அளவில் எம் கௌணிய (கௌண்டின்ய) கோத்திர முதல்வருமாவார்.

மேலும் இந்த சீர்காழிப்பதியே எம் பூர்வீகமாகவும் எம்மிடையே குறிப்புகள் உண்டு. இந்த அளவில் சீர்காழி மகா கும்பாபிஷேகம் எம்மால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகும். தருமை ஆதீன Dharumapuram Adheenam அருளாட்சியில் இந்த சீர்காழிப் பெரிய கோயிலில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு கும்பாபிஷேகம் வருகிற மே 24-ஆம் தேதி நடைபெறுவதற்காக கோவில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் யாகசாலை அமைப்பதற்காக களிமண் எடுக்க மேற்கு கோபுர வாயிலில் கோயில் உட்புறத்தில் ஜேசிபி இயந்திரம் கொண்டு பள்ளம் தோண்டியபோது 2 அடியில் புதைந்திருந்த ஐம்பொன் சிலைகளான விநாயகர்,வல்லி தேவசேனா சமேத சுப்ரமண்யர்,வீர சக்தியோடு கூடிய சோமஸ்கந்தர்,பூர்ண புஷ்கலா சமேத ஐயனார், திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் உள்ளிட்ட 22 ஐம்பொன் சிலைகளும்,(அரை அடி முதல் 2 அடி உயரம் உடையது ) மேலும் 400க்கும் மேற்பட்ட திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற சீர்காழி பதிகம் தாங்கிய தேவார செப்பேடுகளும் கண்டெடுக்கப்பட்டன.



இவற்றை தருமபுரம் ஆதீனம் 27வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நேரில் பார்வையிட்டு அவைகள் எந்த காலத்துக்குரிய சிலைகள் என கேட்டறிந்தார். இதுவரையில் இது போன்று எங்கும் கிடைக்காத வகையில் ஒரே இடத்தில் 22 ஐம்பொன் சிலைகள் கண்டெடுக்கப்பட்டதால், பொதுமக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## தேவாரம் எழுதப்பட்டச் செப்பேடுகள்...

இன்றைய நாளில் தமிழக வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தகுந்த தொல்லியல் சான்று பெரும் ஆவணமாகக் கிடைத்துள்ளது.சீர்காழி சட்டநாதர் கோவில் புனரமைப்புப் பணியின்போது பூமிக் கடியில் இருந்து பஞ்சலோக சுவாமி சிலைகளும் செப்பேடு தொகுதிகளும் கிடைத்தன.இந்த செப்பேட்டில் தேவாரப் பதிகங்கள் எழுதப்பட்டிருப்பதுதான் மிகப்பெரும் வியப்பு.

## அரியதொரு வரலாற்று ஆவணம்

சைவத்தின் மிக பிரம்மாண்ட எழுச்சிக்கு அடித்தளமிட்டவர்கள்அப்பர்,சுந்தரர்,

26 ஆம் பக்கம் பார்க்க...



# செப்பேடுகளில் எழுதி வைத்ததாகக் கல்வெட்டுகள் கூறிய தேவாரத் திருமுறைகள் இப்போதுதான் கிடைத்துள்ளன!



ஞானசம்பந்தர் என்னும் மூவர். இவர்கள் தீந்தமிழில் பாடிய பதிகங்கள் திருமுறைகள் என்றும் தேவாரம் என்றும் அழைக்கப்பட்டன. காலம்.. கிபி 6–9ஆம் நூற்றாண்டு. வாய்வழியாகமட்டும் பாடப் பட்ட தீந்தமிழ் பதிகங்களாம் தேவாரத் திருமுறைகளின் மூலம் எங்கே.? பதிகங்கள் எழுதப்பட்ட சுவடிகள் எங்கே.? தேடலைத் தொடங்கினார் பேரரசர் இராஜராஜர்.

திருநாரையூர் நம்பியாண்டர் நம்பி



என்பவரின் துணையோடு சிதம்பரம் கோவிலில் பூட்டியிருந்த அறையில் இருந்த தேவாரச் சுவடிகளை மீட்டு திரு முறைகளாகத் தொகுத்தார் இராஜராஜர். திருமுறைகண்ட செல்வன் என்ற பெயரை யும் பெற்றார். தான் எழுப்பிய தஞ்சை பெரியகோவிலில் தேவாரம் பாட 48 ஓதுவார்களை நியமித்து உடுக்கை வாசிப் பவர் ஒருவரையும் மத்தளம் கொட்டும் ஒருவரையும் நியமித்து தினமும் திரு முறைப் பதிங்கள் ஒலிக்கச் செய்தார்.

## அவ்வகையில்..

திருமுறைச்சுவடிகளை மீட்டுத்தந்த சிதம் பரம் கோவில் தேவாரப் பெருங்கோவிலாக அறியப்பட்டது. ஆடவல்லான் முன்பு தினந்தோறும் தேவாரம் பாடப்பட்டன. தேவாரம் பாடிய மூவரின் திருவுருவங்கள் வீதியுலா வந்தது. தேவாரம் பாட மண்ட பங்கள் எழுப்பப்பட்டன. தேவாரம் பாடு வோருக்கும் கேட்போருக்கும் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டன. இக்கோவிலில் உள்ள கல்வெட்டுகள் இச்செய்தியை உறுதி செய்கின்றன.

கங்கைகொண்ட சோழன் இராஜேந் திரரின் 24 ஆம் ஆட்சியாண்டு. நக்கன் பரவை நாச்சியார் என்பவர் கோவிலுக்கு பல்வேறு அறப்பணிகள் செய்கிறார். அவற்றில் ஒன்று.. கோவிலில் நாள் தோறும் திருத்தொண்டத்தொகை பாடு வோருக்கு தானம் அளிப்பது. சிவனின் அடியார் வரலாற்றை செந்தமிழில் கூறும் திருத்தொண்டத்தொகை தேவார மூவரில் ஒருவரான சுந்தரர் எழுதியது.

விக்ரமச்சோழன் காலம்.அவரது முதன்மை அதிகாரியாக இருந்தவர்.“ அரும்பாக்கிழான் மனையிற் கூத்தன் காலிங்கராயன் “இவர் தில்லை திருச் சிற்றம்பலமுடையாருக்குச் செய்த அறப்பணிகள் ஏராளம்..தான் செய்த செயல்களை செந்தமிழ் செய்யுட்களாக கல்வெட்டில் வடித்துள்ளார்.தமிழ் பதிக ங்களான தேவாரத்தை சிதம்பரம் கோவிலில் பாட விரிவான ஏற்பாடுகளைச் செய்தார்.ஞானசம்பந்தர் முதலிய



தேவார மூவரும் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்களை தடையின்றி எல்லா ரும் இருந்து கேட்பதற்கு தேவார மண்டபத் தைத் தில்லையிலே எடுப்பித்த செய்தியை கூறும் கல்வெட்டு..

‘நட்டப்பெருமானார்ஞானங்குழைத்தளி த்தசிட்டப் பெருமான் திருப்பதியம் – முட்டாமைக் கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான்.தெவ்வேந்தர் கெட வாட்போக் குந் தொண்டையர்கோன் மன்“

(தெ. இ. க. தொகுதி ஐஏ. பக்கம், 34 .. செய்யுள் 15)

திருக்கோயிலில் நாள்தோறும் இளங் குழந்தைகளுக்குப் பாலும் எண்ணெயும் வழங்குமாறு ஏற்பாடு செய்த செய்தி..

“செல்வி திருந்தறங்கள் தென்னக ரித் தில்லைக்கேநல்லமகப் பால்எண் ணெய் நாடோறுஞ்– செல்லத்தான் கண் டான் அரும்பையர்கோன் கண்ணக னீர் ஞாலமெல்லாங் கொண்டானந் தொண்டையார் கோன்“ (தெ. இ. தொகுதி ஐஏ. பக்கம் 34, செய்யுள் 18) திருமுறைப் பதிகங்கள் சுவடியில் இருந்தால்தானே அவைகள் செல்லரித்து அழியும். எப்போ தும் திருமுறைப் பதிகங்கள் அழியா தவாறு சுவடியில் இருந்தப் பாடல்கள் அனைத்தையும் செப்பேட்டில் எழுதச் செய்தார். செப்புப் பட்டையத்தில் ஆவண மாக பதிவு செய்தார்..

‘முத்திறத்தார் ஈசன் முதற்றிறத்தைப் பாடியவாறு ஒத்தமைத்த செப்பேட்டி னுள்ளெழுதி – இத்தலத்தின் எல்லைக் கிரிவாய் இசையெழுதினான் கூத்தன் தில்லைச்சிற் றம்பலத்தே சென்று‘ (தெ. இ. க. தொகுதி ஐஏ, பக்கம் 34, செய்யுள் 21) இவ்வாறு தேவராப்பாடல்கள் முழுவதை யும் காலத்தால் அழியா ஏற்பாடாக செப்பேட்டில் எழுதப்பட்டது

இந்த தேவாரம் எழுதப்பட்ட செப்பேடுகள் இன்று எங்கு யாரிடம் உள்ளது என்ற விபரம் அறியக்கிடைக்கவில்லை..

இந்த சூழலில்தான்..இன்று சீர்காழி கோவிலில் தேவாரம் எழுதப்பட்ட செப்பேடுகள் கிடைத்துள்ளது. முதல் பார்வையில் தேவாரப் பதிகங்கள் என்று உறுதி செய்யப்பட்டுள்ளன.செப்பேடு யார். காலம்.?எத்தனை இதழ்கள்..? என்னெ ன்ன பாடல்கள்.?விபரங்கள் விரைவில் வெளிவரும்.

நன்றி: ஈழத்து வரலாறும் தொல்லியலும்

MakeYourPicture
Events
உங்கள் வீட்டில் நடக்கும் இன்பகரமான நிகழ்வுக்கு புகைப்படம் மற்றும் கானொளிச் சேவை தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம் Make Your Picture உங்கள் நிகழ்வுக்கு விருப்பத்திற்கு ஏற்ற வாறு குறுகிய காலத்தில் செய்து தரப்படும் நீங்கள் நாடவேண்டிய இடம்
Email: kontakt@makeyourpicture.de
Tel: +49 1577 6629505 |Makeyourpicture.de



மங்கல இசை
உங்கள் மங்களகரமான வைபங்கள் அனைத்திற்கும் நாடுங்கள்!
ஐரோப்பிய தவில் சக்கரவர்த்தி
தவில் லயஞானச் சுடரொளி
கே.பி.செல்வநாயகம்
* +049 176 20 98 3199
* 0202 27 13 698

அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# இவர் 'எனக்கு வேணும்!'

பூப்புனித நீராட்டுவிழாவுக்குச் சென்றிருந்தோம். வழக்கம்போல அலங்கார மேடை, கண்ணைப் பறிக்கும் சோடனைகள். சினிமாப்பாடல்கள் காதைப் பிழந்தன. வட்ட வடிவ மேசையும் கதிரைகளும் போட்டிருந்தார்கள். அதற்கு வடிவான சட்டைகளும் போட்டிருந்தார்கள். நானும் மனைவியும் ஒரு இடத்தில் போய் அமர்ந்து கொண்டோம். சற்று நேரத்தில் ஒரு முதியவர், அவரின் மனைவி, மகள், மருமகன், இரண்டு பிள்ளைகள் வந்து அருகே அமர்ந்தார்கள். முதியவருக்கு எழுபதிற்கு மேல் இருக்கும். கதைக்காமல் எல்லாவற்றையும் நோட்ட மிட்டபடி இருந்தார்.

மேசையில் சிவப்புக்கலரில் ஹகோலாவும்', மஞ்சள் கலரில் ஹபன்ராவும்', நீர்ப்போத்தலும் இருந்தன. மேசைக்கு இன்னமும் சோட்டீற்ஸ் வரவில்லை. முதியவர் பொக்கற்றுக்குள்ளிருந்து ஒரு சீலைப்பையை உருவி எடுத்து, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு கையை உள்நுழைத்து எதோ ஹதிரிபோஷா' போன்ற ஒன்றை எடுத்து சாப்பிட ஆரம்பித்தார். அவர் தனக்கான உணவை எடுத்து வந்திருக்கின்றார். அவர் உணவை முகத்தில் பூசி விளையாட, மனைவி துடைத்துவிட்டபடி இருந்தார். உணவு பிடிக்கவில்லை என அவரது முகச்சுழிப்பு சொல்லியது. அதுவரையும் சோடனைகளிலும் மின்விளக்குகளிலும் லயித்திருந்த குழந்தைகளின் கண்கள் மேசைக்குத் திரும்பின.

"ஐய் சிவப்புக்கலர". ஐய் மஞ்சள் கலர் "சிவப்பு எனக்கு வேணும்!" என்றாள் குட்டிப்பெண். "எனக்கு மஞ்சள்!" என்றான் பையன். குளிர்பானங்களின் தீங்குகள் பற்றி பிள்ளைகளுக்கு ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தார் அவர்களின் அம்மா. மகன் கொஞ்சம் சொல்வழி கேட்டான். குட்டிப்பெண்ணோ அந்த இடத்தைப் போர்க்கள மாக்கினாள்.

"எனக்கு வேணும்" எனக்கு வேணும்"

"பிள்ளைகளுக்கு என்ன வயது?" அருகிலிருந்த குழந்தைகளின் அப்பாவிடம் கேட்டேன். "பையனுக்குப் பத்து. பெண்ணுக்கு இரண்டு" சொல்லிவிட்டு தனது மொபைல்போனில் மூழ்கினார் அவர்.

குட்டிப்பெண் பெண் தன் ஆடையினைக் குலைத்தும், தலைமயிரைக் குழப்பியும் அட்டகாசம் போட்டாள். அம்மம்மா தண்ணீர்ப்போத்தலைத் திறந்து ஒரு பிளாஸ்ரிக் கப்பினுள் நிரம்ப ஊற்றி தன் கணவருக்குக் கொடுத்தார். பின்னர் பேரப்பிள்ளைகளுக்கு தண்ணீர் குடியுங்கள் எனப் போத்தலை நீட்டினார். தண்ணீர்ப் போத்தலைக் கண்டதும் பெண் குழந்தையின் அழுகுரலின் உரப்பு இன்னும் கூடியது. "வாருங்கோ வெளியிலை போய் ஊஞ்சல் விளையாடுவோம்" அப்பா குட்டிப்பெண்ணைத் தூக்க, அம்மாவும் பையனும் பின்னாலே போனார்கள். எனது மனைவி குசினிக்குள் பலகாரங்கள் பொதி செய்யப் போவதாக சொல்லிச் சென்றார். மேசையைச் சுற்றி இப்பொழுது முதிய தம்பதியினரும் நானும் மாத்திரம் இருந்தோம்.



சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஹகோக்' போத்தலை மெதுவாகத் திறந்து பிளாஸ்ரிக் கப்பின் விளிம்புவரை ஊற்றினேன். மூடியை எடுத்துப் போத்தலை மூடும்போது திடீரென எனது கையை முதியவர் பிடித்தார். தன்னிடம் போத்தலைத் தரும்படி ஜாடை காட்டினார். இந்தக் காட்சியைக் கண்டுவிட்ட அவரின் மனைவி பதறிப் போனார்.

"உங்களுக்குக் கூடாது எண்டல்லே டொக்ரர் சொன்னவர்" அவரிடமிருந்து போத்தலைப் பறித்து, கப்பின் கால்வாசிப் பகுதிக்குக் கீழாக நிரப்பினார். அது முதியவரின் வாய்க்கு ஒரு மிடறு போலாகியது.சிற்றுண்டி வந்தது.

பூப்புனித விழா ஆரம்பமாகியது.

முதியவரின் மகள் பிள்ளைகளை உள்ளே அழைத்து வருவதும் போவதுமாக இருந்தாள். குழந்தைகள் இப்பொழுது ஹகலரை' மறந்துவிட்டனர். அல்லது ஊஞ்சல் ஆடும்போது மீண்டும் குட்டிப் பிரசங்கம் நடந்திருக்கலாம். என்னுடைய மனைவியும் வந்துவிட்டார்.

பூப்புனித நீராட்டுவிழா ஒன்றும் கலியாணவீட்டைப் போல நேரத்தைக் கொன்றுவிடும் சமாச்சாரம் அல்ல. சட்டுப்புட்டென எல்லாமே நடந்து கொண்டிருந்தன.

திடீரென முதியவர் ஹகோக்' போத்தலை எடுத்தார். திறந்து கப்பிற்குள் நிறைஞ்சு வழியும் வரை நிரப்பினார். நான் பயந்து போனேன். பக்கத்தில் அவரது மனைவியைக் காணவில்லை. நான் மனைவிக்கு நடந்த கூத்துக்களைப் பற்றிச் சொன்னேன். பாட்டுச் சத்தத்தில் நாங்கள் கதைத்தது முதியவருக்குக் கேட்டிருக்காது. அவர் கண்களை மூடி, கோக்கின் சுகானுபவத்தில் திளைத்தார். வாயை சப்புக் கொட்டினார். திரும்பவும் கப்பிற்குள் ஊற்றக் கொண்டுபோனவர் ஏதோ சுடலை ஞானம் வந்த கணக்கில் ஊற்றுவதை நிறுத்தினார். கப்பிற்குள் ஓடித்திரிந்த இரண்டொரு துளியையும் வாயில் வைத்துத் தட்டி உறுஞ்சினார். கையினால் வாயைத் துடைத்துவிட்டார். எல்லாம் சரி. மேடையை நோக்கினார். அங்கே மேடையில் ஆரத்தி எடுப்பவர்களின் வரிசையில் அவரது மனைவி கடைசியாக நின்றுகொண்டிருந்தார்.

அவர் ஆரத்தி எடுத்து முடித்த பின்னர், தட்டுக்குள் இருந்த பூக்களை எடுத்தார். மனதிற்குள் ஏதோ நினைத்தபடி ஒருபுறம் தூக்கி எறிந்தார். அப்படியே எல்லாத் திசைகளிலும் தூக்கித் தூக்கி எறிந்தார். கடைசியாக பூக்களுடன் பின்புறம் திரும்பினர். பூப்பெய்திய பெண்ணின் நண்பி ஒருத்தி ஆரத்தி எடுத்த தட்டுகளை வாங்கி வைப்பதற்காக அங்கே நின்றாள். அவளுக்கும் ஒரு எறி. ஆவேச கோலத்தில் நாவூறு கழிக்கின்றாரோ? அல்லது தன்னுடைய கணவர் கோக் குடித்ததை அங்கிருந்து பார்த்துவிட்டாரோ?

மளமளவென்று மேடையை விட்டுக் கீழ் இறங்கி எம்மை நோக்கி வந்தார். கோக் போத்தலை முறைத்துப் பார்த்தார். ஒரு கப்பினுள் தாராளமாக அதை நிரப்பினார். போத்தல் காலியானது. மடக்கு மடக்கு என்று குடித்தார். நாங்கள் விறைத்தபடி அவரைப் பார்த்தோம். "அவருக்குத் தான் கூடாது. எனக்குப் பிரச்சினை இல்லை."

"அவருக்கு நீரிழிவு போல" நான் மனைவிக்குச் சொன்னேன். அவரின் காதுக்குக் கேட்டுவிட்டது.

"இவருக்கு நீரிழிவும் இல்ல. ஒண்டும் இல்லை. டொக்ரர் குடிக்கக்கூடாது எண்டு சொல்லியிருக்கிறார்." இந்தக் கூத்துக்களை மகளும் மருமகனும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு தங்கள் குழந்தைகளை மேய்ப்பதற்கே நேரம் போதவில்லை.

ஹகோக்' போத்தலைப் பார்த்த குட்டிப் பெண், அது வெறுமையாக இருப்பது கண்டு ஏங்கிப் போனாள். உதடுகள் துடிக்க, கண்களில் கண்ணீர் விளிப்பு கட்டியது. விம்மல் பெரிதாக ஓவென்று அழுத் தொடங்கினாள். ஒன்றும் புரியாத தாய், மீண்டும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடினார். "குழந்தைகளுக்குக் கூடாது, எங்களுக்குக் கூடாது, முதியவர்களுக்கும் கூடாது. அப்படியெண்டா இந்தக் குளிர்பானங்களை யார் தான் குடிப்பது? எப்பதான் குடிப்பது?" அந்த முதிய பெண்மணியைப் பார்த்துக் கேட்டேன்.

**சுருதி (அவுஸ்திரேலியா)**

28 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

27 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இவர் 'எனக்கு வேணும்!'

“குடியுங்கோ” ஆர் வேண்டாமெண்டது! அளவா குறைவா குடியுங்கோ. என்ரை இவர் குடிச்ச மாதிரி“ வந்ததற்கு முதியவர் வாய் திறந்து கதைத்து நான் பார்க்கவில்லை. முதன் முறையாக அப்பொழுது புன்னகை செய்தார். “அவருக்கும் கொஞ்சம் குடுங்கோ”

“நோ” நான் குடுக்கமாட்டன். அவர் குடிச்சது காணும்.“ முதியவருக்கு ஒரு திருப்தி. தான் களவாகக் குடித்ததை ஒருவரும் காணவில்லை என நினைத்தார்.

“பாத்தியளே! உங்களுக்காக பரிதாபப் படவும் இஞ்சை ஒருத்தர் இருக்கிறார்.“ கண வரைத் தட்டிச் சொல்லிவிட்டு சிரித்தார்.“நான் இவரிலை சரியான கவனம். இவர் எனக்கு வேணும்“ சொல்லிவிட்டு அவரின் மொட்டந்தலையைத் தடவினார் அந்தப் பெண்மணி. “இவர் எனக்கு வேணும்“ ■

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இசைகேட்டால் நுண்ணறிவு...

காரணத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடிக்கவில்லை. போதைப்பொருட்கள் நம்மை அடிமை ஆக்குவது போல் இசையும் ஒரு விதமாக நம்மை அடிமை ஆக்கிவிடுகிறது. ஒவ்வொரு மனிதனின் இசைச் சுவை வித்தியாசமாக இருந்தாலும் அதன் விளைவு எப்போதும் ஒன்றாகத்தான் இருக்கிறது.

டோபமீன் வெளியிடுவது மட்டும் இல்லாமல் இசை கேட்கும் போது நமது உடலில் மேலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பொதுவாகநமதுஉடலில்எல்லாமேஒருதாளத்திற்கு அடங்கியதாகத் தான் இருக்கிறது. நமது இருதயம் துடிப்பது ஒரு தாளத்தில். நாம் சுவாசிக்கும் போது பிராணவாயு உள்வாங்கி கரியமிலவாயு வெளியேற்றுவது இன்னும் ஒரு தாளம். கடினமான வேலை செய்யும் போது இருதயத் துடிப்பு மற்றும் சுவாசத் தின் தாளம் அதிகரித்துவிடுகிறது.



அதே போன்று தான் நாம் இசை கேட்கும் போதும் இந்தத் தாளங்கள் மாறிவிடுகின்றன. அதன் விளைவாக இரத்த அழுதம் மற்றும் மூளையின் செயல்பாடும் மாறிவிடுகின்றது.

பொதுவாக நமது இருதயம் ஒரு நிமிடத்தில் 72 தடவைகள் துடிக்கின்றது. இந்தத் துடிப்பை 72 பீட்ஸ் பேர் மினிட் (Beats per Minute, BPM) என்று சொல்வார்கள். அதே போன்று தான் இசையின் தாளத்தையும்.BPM ஊடாக அளக்கலாம். ஆராய்ச்சியாளர்கள் அறிந்தது என்னவென்றால் இசையின் தாளம் பொறுத்து நமது உடல் வெவ்வேறு உணர்ச்சிகளை உணர்கின்றது என்பது தான். 72 BPMF அதிகமாக இருக்கும் இசை கேட்கும் போது நாம் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறோம், அதுவே 72 BPMF குறைவாக இருக்கும் இசை கேட்கும் போது நாம் அமைதி ஆகி விடுகிறோம்.

இசையில் இன்னும் ஒரு மிக முக்கியமான விசேஷம் இருக்கிறது. சிறுவர்களின் வளர்ச்சி நேரம் இசை அவர்களின் மூளை விருத்தியைத் தூண்டுகிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் அறிந்துள்ளார்கள். அதுவும் அவர்களின் நுண்ணறிவு எனப்படும் Intelligence Quotient (IQ) அதிகரிப்பதற்கு இசை கேட்டாலே போதும் என்று கூறுகின்றார்கள். எனவே, பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை சிறு வயதினிலேயே சங்கீதம், பியானோ, புல்லாங்குழல், மிருதங்கம் போன்ற ஏதாவது ஒன்றை கற்றுக்கொள்ள விடுங்கள். அவர்கள் மேலும் புத்திசாலிகள் ஆவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

உண்மை சொல்லப்போனால் இப்படி அடுத்து அடுத்தாக இசையினால் நாம் பெறும் பயன்களைப் பற்றி கூறிக் கொண்டே போகலாம். இனி நீங்கள் கூறுங்கள் நண்பர்களே, உங்களுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பு என்ன? உங்களுக்கு பாடத் தெரியுமா அல்லது ஏதும் இசைக்கருவி வாசிக்கத் தெரியுமா? உங்களுக்குப் பிடித்த பாடல் என்ன? இசையோடு இணைந்து வாழுங்கள். ■

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## உலகின் தலை சிறந்த கட்டிடக்கலைகளுள்...

கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. ஐந்து முதல் ஆறு டன் எடையுள்ள ஒவ்வொரு கல்லையும் எப்படி உயரே கொண்டு சென்றார்கள்? என்கிற வியப்பு இன்றும் பலருக்கு இருக்கிறது அல்லவா?கோவிலின் உயரம் எவ்வளவு உயர்கிறதோ அந்த அளவிற்கு சுற்றிலும் மண்ணை சாய்வாக கொட்டி அந்த மலை போன்ற சாய்ந்த பகுதிகளில் கற்பாறைகளைக் கொண்டு செல்லும் “மண்சாரம்“ என்கிற சிஸ்டத்தின் பிரகாரம் இந்த கற்கள் மேலே கொண்டுசெல்லப்பட்டிருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இரண்டாம் உலகப் போரின்போது இக்கோயிலுக்குள் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்ட சமயத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட ஒரு படை அமைப்பு ஏற்படுத்தப்பட்டு இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த நுற்பமான கட்டிடக்கலையினை தன்னகத்தே கொண்டிருக்கும் தஞ்சை பிரதோட்ச்சவர் கோவில் பற்றிய மக்களின் தவறான கட்பித்தங்களை இங்கே நாம் அவசியம் குறிப்பிட்டேயாக வேண்டும் . இன்றும் கூட, தஞ்சை பெரிய கோவிலுக்கு செல்வதால் துரதிருஷ்டம் வரும் என்று மக்கள் நம்புகிறார்கள் என்பதே வேதனையான விடயம் . ஆட்சியாளர்கள்கூட இந்த கோயிலுக்கு ஏதாவது நன்மை செய்தாலோ அல்லது திருத்த வேலைகளை செய்தாலோ , தங்களுடைய பதவிக்கு ஆபத்து வந்துவிடும் என்கிற சென்டிமென் கொண்டவர்களாக இருப்பதுதான் வேடிக்கையின் உச்சம். தற்போது கோயிலின் ஒருசில இடங்களில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. பெரியகோயிலின் வழிபாட்டு முறைகள் திட்டமிட்டு மாற்றப்படுவதாகவும், கோயில் கட்டுமானங்கள் சிதைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. கோவிலை சுற்றியுள்ள அகழிகளில் உள்ள பாறைக் கற்கள் அந்தப் பகுதி மக்கள் சிலரால் தமது சொந்த கட்டுமானங்களுக்காக கொண்டுசெல்லப்படுவதும் கவலைக்குரியவொன்றே.

அதுமட்டுமன்றி பெரியகோவில் குறித்து பல்வேறு கட்டுக்கதைகள் சொல்லப்பட்டு வருகின்றது. ஏன் இவ்வாறான கட்டுக்கதைகள் உலவுகின்றன என சிந்தித்துப்பார்த்தால், ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய விஞ்ஞான அறிவை இருட்டடிப்பு செய்வதன்



மூலம் ஆதிக்கச் சிந்தனையாளர்களால் மூடத்தனங்களை பரப்புவதில் சுயநலம் அடங்கி யுள்ளது என்பதும், பழமை குறித்த கதைகளை விஞ்ஞானம் மறுக்கும் போது, மக்கள் உண்மையை அறியவிடாமல் மூடத்தனங்களை ஊதிப் பெருக்குவது காரணமாக அமைவதையும் அவதானிக்கலாம். இவ்வாறு தஞ்சை கோவில் பற்றி நிலவும் தவறான கருத்துக்களில் ஒன்றுதான் கோயில் கோபுரத்தின் நிழல் கீழே விழாது என்பது.

ஆனால் காலை நேரத்தில் கோபுரத்திற்குப் பின்பக்கமும், மாலை நேரத்தில் கோபுரத்தின் முன்பக்கமும் கோபுரத்தின் நிழல் தரையில் விழும் என்றும், விமானத்தின் உயரத்தில் இருக்கும் கல் 80 டன் கொண்ட ஒற்றைக் கல் என்கிற தவறான கருத்திற்கு, உயரே இருப்பது 80 டன் உள்ள ஒரே கல் அல்ல என்றும் பல கற்களை ஒன்றாக ஒட்டி வைத்திருக்கும் நுட்பமான வேலைப்பாடான அவ்வமைப்பானது ஆரஞ்சு பழம் ஒன்றோடு ஒன்று ஒட்டியிருப்பதைப் போன்ற நுட்பமே அது என்றும், கோவிலில் உள்ள நந்தி வளர்கிறது என்பதோடு இரவு நேரத்தில் நந்தியானது எழுந்து மேய்வதற்குச் செல்கிறது என்றும் அப்படி வளராமலும் மேயச் செல்லாமலும் இருப்பதற்காக முதுகில் கடப்பாரை கொண்டு ஆணி அடித்து வைத்திருக்கிறார்கள் என்கிற புரளிகளுக்கு விளக்கமளிக்கும் வகையில் அவையெல்லாம் தவறான கட்டுக்கதைகள் என்கிறார் கல்வெட்டு ஆய்வாளர் மணிமாறன்.

உலகின் மிகச் சிறந்த பொக்கிஷங்களில் ஒன்றான இந்த கோவிலை இனி வரும் தலைமுறையினர்களுக்கும் சரியான தகவலோடு அதன் பெருமையானது கொண்டுசேர்க்கப் படவேண்டும் என்கிற கடப்பாடு நம் ஒவ்வொருவருக்குமே உண்டு . ■









அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



Dr.IN

# காதுக் குடுமி அகற்றுதல்

## எப்பொழுது? எவ்வாறு?

கண்களிலிருந்து நீர் வழிய, வேதனையில் முகம் சோர்ந்து கிடக்க காதைப் பொத்திக் கொண்டு வந்தான் பையன்.

“குளிச்சுப் போட்டு வந்தவனின்ரை காதுக் குடுமியை எடுப்பம் என்று இயர் பட்சை வைத்தபோது ஆட்டிவிட்டான். குத்திப் போட்டுது போலக் கிடக்கு“ என்றாள் அம்மா.

பையனின் காதைப் பரிசோதித்தேன்.

வன்முறைப் பாதிப்பிற்கு ஆளான அளுத்ஹம நகரின் அவலக் கோலம் போல குருதி படர்ந்த குடுமி கிடந்தது. இங்கு வன்முறையை உபயோகித்தது இன வன்முறையாளர்கள் அல்ல. சொந்தத் தாய்தான். காதைச் சுத்தம் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் செய்தது வன்முறைபோல் ஆகிவிட்டது.

காதுக் குடுமியை மட்டுமின்றி, குளிக்கும்போதும் தலை முழுகும் போதும் காதிற்குள் போன நீரையும் எடுக்க வேண்டும் என்றெண்ணி, காதைக் கிண்ட முனையும் “18ம் நூற்றாண்டு தாய் தந்தையார்கள்“ இன்றும் எமது சமூகத்தில் இருக்கிறார்கள்.காதிற்குள் போன நீர் தானாகவே வெளியே வந்துவிடும். அல்லது சற்று நேரம் செல்ல தானகவே உலர்ந்துவிடும் என்பதை இந்த விஞ்ஞான யுகத்திலும் இவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

### காதுக்குடுமி

எமது காதிலுள்ள சுரப்பிகளால் காதுக்குடுமி சுரக்கிறது. தூசி, மற்றும் சிறு அந்நியப் பொருட்கள் காதினுள் செல்லாது தடுப்பதற்கானது இது என நம்பப்படுகிறது. தொற்று நோய்கள் காதுச் சருமத்தில் ஏற்படாமல் காக்கவும் செய்கிறது. இது பொதுவாக காய்ந்து உதிர்ந்து தானாகவே வெளியேறிவிடும்.

எல்லோருக்கும்தான் காதில் இவ்வாறு சுரக்கிறது. ஆனால் ஒரு சிலருக்கு மாத்திரம் அது காய்ந்து கட்டியாகி இறுகிவிடுகிறது.

### இதற்குக் காரணங்கள் சில

சிலரது காதின் சருமம் சொர சொரப்பாக இருந்து அதிகம் உதிர்ந்து குடுமியிடன் சேர்ந்து இறுகக் கூடும். அல்லது சிலரது காதின் அமைப்பு வளைவானதாக இருந்தால் இது வெளியேறுவது தடைப்படக் கூடும்.

சிலர் பட்ஸ் போட்டு எடுக்க முயலும் போது குடுமி வெளியே வருவதற்குப் பதிலாக மேலும் உட்புறமாகத் தள்ளுப் படுவதும் உண்டு. காலப்போக்கில் இவை சேர்ந்து இறுகிவிடலாம்.



சுமார் 100 போரில் 6 பேருக்கு காதில் குடுமி இறுகி அடைத்துவிடுவதாகத் தரவுகள் சொல்கின்றன. குச்சி, சட்டைப் பின், காது கிண்டி, பஞ்சுத் துண்டு எனப் பலவற்றைத் தேவையின்றி உபயோகித்து ஆபத்தை வாங்குபவர்கள் பலர். காதுக் குடுமிப் பிரச்சனை, காதுவலி, காதில் கிருமித் தொற்று, சீழ் வடிதல் போன்ற பிரச்சனைகளோடு வருபவர்களில் பலர் இவற்றைப் பயன்படுத்தி காதைக் கிண்டுபவர்களாகவே இருக்கிறார்கள்.



### மருத்துவரைக் காண வேண்டுமா?

காதிற்குள் குடுமி இருந்தாலும் பலருக்கும் எந்தவித இடைஞ்சலையும் ஏற்படுத்துவதில்லை. இருந்தபோதும் அது அதிகமாக இருந்தால், அல்லது காய்ந்து இறுகி செவிக்குழாயை அடைத்திருந்தால் பல்வேறு அறிகுறிகள் ஏற்படக் கூடும. உதாரணமாக காது அடைத்துக் கிடப்பது போன்ற உணர்வு ஏற்படக் கூடும். சிலருக்கு காது கேட்பது மந்தமாகவும் கூடும். ஒரு சிலருக்கு தலைச் சுற்று ஏற்படலாம். இன்னும் சிலருக்கு காதினுள் கிணு கிணுவென ஏதாவது சத்தம் ஏற்படலாம். காதில் அரிப்பு ஏற்படவும் வாயப்புண்டு. இருந்தபோதும் சாதாரண காது அடைப்பு இருந்தால் மருத்துவரிடம் உடனடியயாக ஓட வேண்டியதில்லை. ஆயினும் கீழ் கண்ட அறிகுறிகள் இருந்தால் தாமதிக் காது மருத்துவரை நாடுங்கள். கடுமையான தலைச்சுற்று, உங்களைச் சூழ இருப்பவை கடுமையாகச் சுழல்வது போன்ற உணர்வு ஏற்பட்டால். வழமைபோல நடக்க முடியாது சமநிலை பாதிபுற்றால் காய்ச்சலும், கடுமையான வாந்தியும் சேர்ந்து வந் தால். திடீரென காது கேட்காமல் அடைத்துக் கொண்டால்

30 ஆம் பக்கம் பார்க்க...



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் – (Zeist) சைஸ்ற், நெதர்லாந்து

அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் 2023

01 ஆம் திருவிழா 02.06.2023 வெள்ளிக்கிழமை

10 ஆம் திருவிழா 11.06.2023 ஞாயிறு தேர்

பொது உபயம் விரும்பும் அடியார்கள் தங்களால் இயன்ற உதவிகளை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:-

Lann van Vollenhove – 2195, 3706 GW Zeist .NL

31630037851, 31638666169, 31633393241, 31655133514, 31621958658


05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## குற்றம் செய்யாமல்

செஞ்சோலைத் தாக்குதலின் மீது திருப்ப விரும்புகிறேன். இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டது Nazi Germay குண்டு வீச்சிலிருந்து தன் குழந்தைகளைப் பாதுகாக்க பிரிட்டன் தன் குழந்தைகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்திய சம்பவம் நான்கு கால் நாய்கள் கூட தன் குட்டிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்.புட்டின் கூட உக்ரேன் மீது பகைமை காட்டினாலும் அந்த நாட்டு குழந்தைகளை பாதுகாப்பாக தமது நாட்டுக்குள் கவந்து புதிய அறிவு புகட்டுகிறார். ஆனால் எங்கள் ஈழ மணித் திருநாட்டில் எங்கள் தங்கைகள் பள்ளிக் கூட படிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அகர குணமும் அரக்க பொண்ட பேரினவாத ஆட்சியாளர்கள் இஸ்ரேல் நாட்டின் KFr போர் விமானங்கள் நான்கை செஞ்சோலை பள்ளியின் மீது ஏவி விட்டு ஒவ்வொரு விமானமும் 4 குண்டுகளை (மொத்தம் 16 குண்டுகளை) அந்தக் குழந்தைச் செல்வங்கள் மீது ஈவிரக்கமின்றி பொழிந்து விட்டு கொழும்புக்கு திரும்பிச் சென்றன.

2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி அதிகாலை 7 மணிக்கு நடத்தப்பட்ட இந்த வான்வழி வெறியாட்டத்தில் 61 பெண் குழந்தைகள், ஆசிரியர்கள் மூவர் கொல்லப்பட்டனர். மற்றும் 130 மாணவியருக்கு கடுமையான காயம் ஏற்பட்டது. காயம்பட்ட பெண்களில் ஒருவர் தமது காலை இழந்தார். இன்னொருவர் பார்வையை இழந்தார்.

இது ஒரு அநாதை ஆசிரமம் அல்ல 2 வருடங்களாக நாங்கள் இதனை கண்காணித்து வருகிறோம். இது புலிகளின் பயிற்சி முகாம் என்று இலங்கை அரசு குறிப்பிட்டது. ஐநா அதிகாரி Orla Clinton கொல்லப்பட்ட 53 பேரும் 16க்கும் 18க்கும் இடைப்பட்ட வயதுடைய இளம் மாணவியர். அவர்கள் குழந்தைப் போராளிகள் அல்ல. அவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த A/L உயர்தர மாணவர்கள் என்று குறிப்பிட்டார். கிளிநொச்சி மாவட்ட கல்வி பணிப்பாளர் ரி. குருகுலராஜாவும் முல்லைத்தீவு மாவட்ட கல்வி பணிப்பாளர் பி.அரியாட்ணமும் இறந்த மாணவியர் தமது மாவட்டத்து பள்ளிக்கூட மாணவியர் என்று உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

இது நாகரிகமற்ற காட்டுமிராண்டித்தனமான ஈவிரக்கமற்ற தாக்குதல் என்று தமிழ்நாடு சட்ட மன்றம் பிரேரணை நிறைவேற்றியது.

அந்த 61 அப்பாவிப் பெண் குழந்தைகளின் மேனியை கொன்று எரித்தாகிவிட்டது. ஆனால் பாதியிலே பறிக்கப்பட்ட அந்த குழந்தைகளின் ஆன்மாவோ கொலைஞர்களைத் தேடித் தேடிப் பழிவாங்கும். இது எனது நம்பிக்கை.

29 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## காதுக் குடுமி

அக்கறை எடுத்து மருத்துவரைக் காண வேண்டும். நீங்கள் சொல்வதைக் கேட்டும், காதை பளிச்சிடும் வெளிச்சத்திலும், அதற்குரிய கருவிகள் (otoscope) கொண்டும் பரிசோதித்து உங்கள் காதில் உள்ள பிரச்சனை காதுக்குடுமிதானா அல்லது கிருமித் தொற்று, அந்நியப் பொருட்களா அல்லது வேறு நோய்களா என்று கண்டறிவார். காதுக் குடுமியை அகற்றல் ஒருவரது காதுக் குடுமியானது மிக அதிகமாகவோ மிக இறுக்கமான பாறை போலவோ அல்லாது மெதுமையானதாக இருந்தால் அதைத்தானே அகற்ற முடியும். இருந்தபோதும் செவிப் பறையில் துவாரம் உள்ளவர்கள், காதால் நீர் வடிபவர்கள், காதில் கிருமித் தொற்று உள்ளவர்கள் அவ்வாறு தாங்களே அகற்ற முயல்வது ஆகாது.

### எவ்வாறு அகற்றுவது?

இயர் பட்ஸ், குச்சி சட்டைப் பின், காது கிண்டி போன்றவற்றை உபயோகிக்க வேண்டாம் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம். உள்ளங்கையில் சற்று நீரை எடுத்து அதைக் காதிற்குள் விடவேண்டும். பின்னர் தலையைச் சரிக்க உள்ளே விட்ட நீரானது குடுமியைக் கரைத்துக் கொண்டு வெளியே வந்தவிடும்.

இவ்வாறு சில தினங்களுக்கு குளிக்கும்போது செய்து வர காதுக் குடுமி அகன்றுவிடும். குடுமி சற்று இறுக்கமாக இருந்தால் ஒலிவ் எண்ணெய் அல்லது நல்லெண்ணெயில் சில துளிகளை ஒரு சில தினங்களுக்கு குறிப்பட்ட காதில் விட்டுவர அவை இளகி வெளியேறும். பேபி ஓயில், கிளிசரீன் போன்றவற்றையும் சிலர் பயன்படுத்துவது உண்டு.

### காதுக் குடுமியை இளக வைக்கும் மருந்துகள்

பல விதமான மருந்துகள் கிடைக்கின்றன. பெரும்பாலான அரச மருத்துவ மனைகளிலும் பல தனியார் மருத்துவர்களும் Sodium bicarbonate ear drops துளி மருந்தைப் பயன்படுத்துகிறார்கள். இது விலை மலிவானது. இலகுவில் தயாரிக்கக் கூடியது. பொதுவாகப் பாதுகாப்பானது. காது சற்று வரண்டது போன்ற உணர்வு சிலரில் ஏற்படலாம். அது தானாகவே மாறிவிடும். உபயோகிக்க ஆரம்பித்த காது குடுமி கரையும் மருந்து குப்பிகளை 4 வாரங்களுக்கு மேல் வைத்திருக்க வேண்டாம். அகற்றிவிடவும். Waxol, Molcer, Cerumol போன்ற விலை உயர்ந்த குடுமி இளக்கி மருந்துகளும் (இலங்கையில் கிடைக்கின்றன.) எவ்வாறு உபயோகிப்பது தினமும் எத்தனை தடவைகள் விட வேண்டும்,



தொடர்ந்து எத்தனை நாட்களுக்கு விட வேண்டும் என்பவை பற்றி உங்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுங்கள். துளி மருந்துகளுடன் வரும் ஆலோசனைக் குறிப்புகளையும் கவனமாகப் படிக்கவும். மருந்து விட ஆரம்பிக்க முன்னர் உங்கள் கைகளைக் கழுவிச் சுத்தப்படுத்த மறக்காதீர்கள். உங்களால் உங்களுக்கே துளிகளை விடுவது சிரமமாக இருந்தால் மற்றொருவரின் உதவியைப் பெறுங்கள். மருந்து விட வேண்டிய காதானது மேற்புறம் பார்க்குமாறு கட்டிலில் சரிந்து படுங்கள். காதுமடலை சற்று முற்புறமாக இழுத்தால் காதுக் குழாய் நேராகி துளி மருந்து விடுவதற்கு வசதியாக இருக்கும். 3-4 துளிகளை விடவும். காது மருந்தால் நிறைந்துவிடும். துளி மருந்துப் போத்தலின் முனை காதில் படாதவாறு மருந்தை விடுவது அவசியம். இல்லையேல் காது மடலில் உள்ள கிருமிகளால் மருந்து மாசடைந்து தொடர்ந்து உபயோகிக்க முடியாது போய்விடும். தலையை திருப்பாது 5 முதல் 10 நிமிடங்களுக்கு அந்த நிலையிலேயே படுத்திருந்தால் மருந்து காதிலிருந்து வெளியே சிந்தாது உள்ளேயே தேங்கி நின்று குடுமியை கரைத்துவிடும். நீங்கள் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போது மேலதிக மருந்து தானாகவே காதிலிருந்து வெளியேறிவிடும். மற்றைய காதிலும் குடுமி இருந்தால் இதைப் போல அதிலும் மருந்தை விடவும். பொதுவாக 3 முதல் 5 நாட்களுக்கு இவ்வாறு மருந்தை காதினுள் விட குடுமி கரைந்து வெளியே–றிவிடும். ஆயினும் மருந்தை காதினுள் அவ்வாறு விட்டும் நிவாரணம் கிடைக்கவில்லை எனில் மருத்துவரைச் சந்திக்கவும். மிகுந்து இருப்பதை வெளியே எடுப்பதாக எண்ணி இயர் பட்சை காதினுள் வைத்து சுத்தப்படுத்த முயலாதீர்கள். அது வெளிளேறாது மிகுந்து இருப்பதை மேலும் உள்ளே தள்ளி நிலைமையை மோசமாக்கிவிடும். குடுமிக்கென மருந்து விட்ட காதினுள் அழுக்குகள் படர்ந்திருந்தால் சற்று தண்ணீரை காதினுள் விட்டு பின்னர் தலையை மறுபுறம் சரிக்க அவை அகன்றுவிடும். வெளிப்புறக் காதை சுத்தமான துணியினால் துடைத்து சுத்தப்படுத்தலாம்.



17 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பதினேழு ஆண்டுகள் சென்றாலும் தினம்
உன் நினைவு மட்டும் என்றும் எம்முடனேயே
அம்மா என்றும் அன்பே என்றும் சொல்ல
நீயில்லை!
உன் நினைவால் வாடி வதங்குகின்றோம்
இதயத்தில் உன்னால் விதைக்கப்பட்ட அன்புகள்
இப்போ செழித்து பூத்து குலுங்குகின்றன
நினைவெல்லாம் நீயே தாயே!

என்றும் உன்னை மறக்காமல் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திருமதி ஞானேஸ்வரி சிவஞானசுந்தரம்

தோற்றம் : 25.09.1942
மறைவு : 09.05.2006

தகவல்: சு.சிவஞானசுந்தரம் +49 172 9564 429


Wuppertal நகரில்... Asia Lebensmittel

மாதத்தில் முதல் வாரத்தில் புதன்கிழமை முதல் சனிக்கிழமை வரை மளிகைப்பொருட்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

மரக்கறி வகைகளுக்கும் | கடல் உணவு வகைகளுக்கும் | இன்றே நாடுங்கள்

+49 176 62728598 | 020289012114




Kaiserstraße 16, 42329 Wuppertal, Germany

# டாட்டூ பிரியை த்ரிஷா



நடிகை த்ரிஷா பொன்னியின் செல்வன் படத்தில் குந்தவையாக நடித்த நிலையில், அடுத்தடுத்து முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடிக்கும் வாய்ப்புகள் குவிந்து வருகின்றன. லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்து வரும் லியோ படத்தில் ஹீரோயினாக நடித்து வருகிறார் த்ரிஷா.

குருவி பட காலத்தில் இருந்தே டாட்டூ மீது அதிக பிரியம் கொண்ட நடிகையாக தமிழ் சினிமாவில் வலம் வருகிறார். குருவி படத்துக்கு முன்பாக அவர் தனது மார்புக்கு மேல் போட்ட அந்த நெமோ மீன் டாட்டூ அந்த படத்தில் ஏகப்பட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டு ரசிகர்களுக்கு விருந்து கொடுத்திருக்கும். அந்த மீன் டாட்டூவுக்கு கிடைத்த யோகத்தை பார்த்தீங்களா? என அப்போதே ஏகப்பட்ட இளைஞர்கள் ஏங்கித் தவித்தனர். அந்த ஒரு டாட்டூ மட்டுமின்றி நடிகை த்ரிஷாவின் உடம்பில் பல இடங்களில் அடிக்கடி டாட்டூக்களை குத்திக் கொள்வதை வாடிக்கையாக கொண்டிருக்கிறார். அடுத்ததாக தனது கையில் தனது ரிஷப ராசியை குறிக்கும் விதமாக டாரஸ் டாட்டூவை போட்டுள்ளார் த்ரிஷா.

### ஜெயம் ரவி டாட்டூ:

நடிகை த்ரிஷா ஒரு டாட்டூ பிரியை என்பதை புரிந்துக் கொண்ட பூலோகம் படத்தின் இயக்குநர் கல்யாண கிருஷ்ணன் த்ரிஷாவின் தொடையில் ஜெயம் ரவியின் டாட்டூவை போடுவது போன்ற காட்சிகளை வைத்திருப்பார். ஆனால், அது வெறும் படத்துக்கு போடப்பட்ட தற்காலிக டாட்டூ என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், அந்த படங்கள் வெளியான சமயத்தில் த்ரிஷா டாட்டூ போடும் அந்த வலைத்தளங்களைப் பின்னியெடுத்தன.

### முதுகில் ஒரு டாட்டூ:

சில ஆண்டுகளுக்கு முன்பாகவே தனது முதுகில் கேமரா ஒன்று இருப்பது போன்ற டாட்டூவை போட்டிருந்தார். சினிமா மீது உள்ள காதல் காரணமாக அந்த டாட்டூவை த்ரிஷா குத்தியிருந்தார். தற்போது பொன்னியின் செல்வன் ப்ரோமோஷன் நிகழ்ச்சிகளுக்கு ஸ்லீவ்லெஸ் உடையில் கலந்து கொண்ட த்ரிஷாவின் அந்த பழைய டாட்டூ பளிச்சென தெரிய நெட்டிசன்கள் த்ரிஷாவின் புதிய டாட்டூ இது என கொண்டாடி வருகின்றனர்.






# யாழ்பாணத்தில் கே.ஜி.எப். நாயகன் யஷ்

கேஜிஎப் படத்தின் இரண்டு பாகங்களின் தொடர் வெற்றியால் பான் இந்திய நடிகராக மாறிவிட்டார் கன்னட நடிகர் யஷ்.

இதைத்தொடர்ந்து அவரது அடுத்த படம் குறித்த எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் அதிகமாக இருக்கிறது. இந்த நிலையில் தற்போது நடிகர் யஷ் தனது அடுத்த படத்தின் லொகேஷன் பார்ப்பதற்காக இலங்கையில் முகாமிட்டுள்ளார் என்கிற தகவல் வெளியாகியுள்ளது.

நடிகர் யஷ் தற்போது இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள யாழ் தேசிய பூங்காவை சுற்றிப் பார்த்து ரசித்துள்ளார்.

அதே சமயம் அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ள இலங்கை அரசு அதிகாரிகளில் ஒருவர் யஷ் பற்றி பெருமையுடன் குறிப்பிட்டுள்ளதுடன் அவர் இலங்கையில் தனது அடுத்த படத்தின் படப்பிடிப்பு நடத்த சில இடங்களை தேர்வு செய்வதற்காக வந்துள்ளார் என்கிற தகவலையும் தனது சோசியல் மீடியா பக்கத்தில் தெரியப்படுத்தியுள்ளார்.



# சூர்யாவின் "கங்குவா"

நடிகர் சூர்யா தற்போது இயக்குநர் சிறுத்தை சிவா இயக்கி வரும் படத்தில் நடித்து வருகிறார். ஸ்டுடியோ கிரீன் ஞானவேல் ராஜா தயாரிப்பில் உருவாகி வரும் இப்படத்தில், பொலிவுட் நடிகை திஷா பதானி, மிருணால் தாக்கூர், யோகி பாபு ஆகியோர் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

சூர்யா 42 என அழைக்கப்பட்டு வந்த இப்படத்திற்கு கங்குவா என தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த தலைப்பு வெளியானது இணையத்தில் பெரும் புயலை கிளப்பியது. ரஜினி காந்த் நடித்த ஒரு இந்தி படத்தில் தலைப்பு இது என படத்தின் தலைப்பு குறித்து பல கருத்துக்கள் இணையத்தில் தீயாக பரவின.



இதையடுத்து, படத்தின் இயக்குநர் கங்குவா என்பதன் அர்த்தத்தை விளக்கி உள்ளார். அதில், கங்குவா என்பது படத்தில் நாயகனின் பெயர் என்றும் கங்கு என்றால் நெருப்பு என்றும் கங்குவா என்றால் நெருப்பின் சக்தி என்று அர்த்தம் என்றும், 1500 வருடங்களுக்கு முறைப்பட்ட கதை என்றும் தமிழ் உள்பட 10க்கும் மேற்பட்ட மொழிகளில் இப்படம் வெளியாக உள்ளதால் அனைத்து மொழிக்கும் பொருத்தமான ஒரு பெயரை தேர்ந்து எடுத்து வைத்துள்ளதாக கூறியுள்ளார்.

























அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்